Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37
கதிர் : 68
புதன்கிழமை
02 பெப்ரவரி 2022
தை 20 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053
பக்கங்கள்: 16
விலை: 30/=

**கொரோனா**
நேற்று 1,137
மொத்தம் 6,12,322

**உயிரிழப்பு**
நேற்று 32
மொத்தம் 15,473

### தொடரும் இந்திய ட்ரோலர்களின் அடாவடி

# பொங்கியெழுந்த மீனவர்கள் வீதிகளில் முற்றுகைப் போர்!




## பதற்றமானது பருத்தித்துறை

## மருதங்கேணி பிரதேச செயலகமும் முடக்கம்

யாழ்ப்பாணம், பெப்ரவரி 2

இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்தக்கோரி பருத்தித்துறை மீனவர்கள் தொடர் போராட்டங்களில் ஈடுபட்டுள்ளனர். வடமராட்சி கிழக்கு, மருதங்கேணி பிரதேச செயலகத்தை நேற்றுக் காலை முதல் மீனவர்கள் முற்றுகையிட்டதாலும், வீதிமறியல் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டதாலும் அந்தப் பிரதேசத்தில் பதற்ற நிலைமை காணப்பட்டது.

15 ➤

## விரிவடைகிறது போராட்டம்!

யாழ்ப்பாணம், பெப்.2

இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறிய மீன்பிடியைத் தடுத்து நிறுத்தக் கோரி பருத்தித்துறையில் மீனவர்கள் ஆரம்பித்துள்ள போராட்டம் வடக்கு மாகாணத்தில் ஏனைய

15 ➤

## மீனவர்களுக்கு மதுபோதையாம்!

*போராட்டத்தைக் கொச்சைப்படுத்திய டக்ளஸ்*

யாழ்ப்பாணம், பெப்.2

எங்கள் கேள்விகளுக்குப் பதில் சொல்ல முடியாத அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, எங்களுக்கு மதுபோதை என்று கூறிவிட்டு அங்கிருந்து புறப்பட்டுச் சென்றுள்ளார்.

இந்திய இழுவைப்

15 ➤

## 21 தமிழக மீனவர்கள் கைது

***இருவர் சிறுவர்கள்**
***ஒருவருக்கு கொரோனா**

யாழ்ப்பாணம், பெப்.2

எல்லைதாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டில் இந்திய மீனவர்கள் 21 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும், அவர்கள்

15 ➤

## டக்ளஸுக்கு மீனவர்கள் எதிர்ப்பு!

யாழ்ப்பாணம், பெப்.2

எல்லைதாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய இழுவைப் படகு ஒன்று நேற்று முன்தினம் இரவு பருத்தித்துறை மீனவர்களால் முற்றுகையிடப்பட்டு மடக்கிப் பிடிக்கப்பட்டிருந்த நிலையில், அங்கு சமரச முயற்சிகளை

15 ➤



## பாதிரியாரின் வீடு புகுந்து வன்முறைக் குழு தாக்குதல்!

யாழ்ப்பாணம், பெப்.2

கோண்டாவில் கிழக்கில் உள்ள பாதிரியார் ஒருவ

15 ➤

*முச்சந்தி முரளி*




## பெப்ரவரி 4 கறுப்பு நாள்!

*வடக்கு, கிழக்கில் பெரும் போராட்டம்*

யாழ்ப்பாணம், பெப்.2

இலங்கையின் சுதந்திர தினமான பெப்ர

15 ➤

## பயங்கரவாதச் சட்டத்தில் கைதான 9 பேர் விடுவிப்பு

*வடக்கு, கிழக்கை சேர்ந்தோர் தொடர்ந்தும் சிறைகளில்*

யாழ்ப்பாணம், பெப்.2

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் அண்மையில் கைது செய்யப்பட்டு

15 ➤

## தொடர்கிறது மின்வெட்டு!

கொழும்பு, பெப்.2

திட்டமிட்ட மின்வெட்டுக்கள் தற்போதைக்கு இல்லை என்று இலங்கைப்

15 ➤

## வட்டுக்கோட்டையில் வீடுடைத்துத் திருட்டு

யாழ்ப்பாணம், பெப்.2

வட்டுக்கோட்டை, சங்கரத்தை ஓடக்கரை வீதி

15 ➤

## வெடிபொருள் மீட்பு

அச்சுவேலி, பெப்.2

அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கதிரிப்பாயில் நேற்று எறிகணை ஒன்று மீட்

15 ➤

## பட்டப்பகலில் மோ. சைக்கிள் திருட்டு

யாழ்ப்பாணம், பெப்.2

வட்டுக்கோட்டை, சித்தன்கேணியில் பட்டப்பகலில் மோட்டார் சைக்கிள் திருடப்பட்டுள்ளது. இது தொடர்பாக வட்

15 ➤



இனி எல்லாமே ANYTIME

SLT-MOBITEL MOBILE முற்கொடுப்பனவு வாடிக்கையாளர்கள் இரவு பகல் எனும் வேறுபாடுகளின்றி விரும்பும் வகையில் DATA வினைப் பயன்படுத்துங்கள்.

ரூ.399/- 6.5 GB | ரூ.499/- 9 GB | ரூ.699/- 14 GB | ரூ.999/- 20 GB | ரூ.1999/- 60 GB

இன்றே ரீலோட் செய்து அக்டிவேட் செய்யுங்கள்

MOBILE 4G LTE SLTMOBITEL

noolaham.org | aavanaham.org

# இ.போ.ச. ஊழியர்களுக்கு ரூ.5 ஆயிரம் கொடுப்பனவு

## போக்குவரத்து ஊழியர் சங்கம் வலியுறுத்து

**கொழும்பு, பெப். 2**

**இலங்கை போக்குவரத்துச் சபை ஊழியர்களுக்கும் 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவை வழங்குமாறு அகில இலங்கை போக்குவரத்து ஊழியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.**

இது தொடர்பில் சங்கத்தின் தலைவரான சேபால லியனகே தெரிவிக்கையில்:-

உத்தியோகத்தர்களின் சம்பளத் திருத்தம் மற்றும் சம்பள நிலுவைத் தொகையை வழங்குதல் உள்ளிட்ட பல கோரிக்கைகளுக்குத் தீர்வைக் கோரி வருகின்றோம். கோரிக்கைகளுக்குத் தீர்வை வழங்குவதற்கு அரசு தலையிடாவிடின், கடுமையான தொழிற்சங்க நடவடிக்கையை மேற்கொள்வோம்.

இலங்கை போக்குவரத்து சபை ஊழியர்கள் பெரும் நிதி நெருக்கடியை எதிர்நோக்கி வருகின்றனர். 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவானது சபைகள் உட்பட அரச நிறுவனங்களுக்கு வழங்கப்படும் என்று அரசு தெரிவித்தபோதிலும், இலங்கை போக்குவரத்துச் சபை ஊழியர்களுக்கு கொடுப்பனவு வழங்குவது தொடர்பில் எந்த முடிவும் எட்டப்படவில்லை.

இலங்கை போக்குவரத்துச் சபை ஊழியர்கள் கொரோனாத் தொற்றின்போது தங்கள் பாதுகாப்பைப் பொருட்படுத்தாமல் கடமைகளை நிறைவேற்றியுள்ளனர் - என்றார். (ம-4-இ)

# குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், பெப். 2

3 பிள்ளைகளின் தந்தையொருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுதுமலைப்பகுதியில் நேற்று இடம்பெற்றது.

மனோரஞ்சன் சுரேஷ் (வயது - 31) என்பவர், இணுவில் பகுதியில் மனைவியுடன் வசித்து வந்த நிலையில், குடும்பத் தகராறு காரணமாக கடந்த பத்து நாள்களாக அவரது மாமனாருடன் சுதுமலையில் தங்கியுள்ளார். இந்த நிலையில் சுதுமலையில் அவர் தங்கியிருந்த வீட்டுக்கு அருகாமையில் தூக்கில் தொங்கிய நிலையில் அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். (ம-4-27-125)



# 'பறவைகள் பார்வை' கோபுரம் திறப்பு

மன்னார், பெப். 2

மன்னார் மாவட்டத்துக்கு பருவகாலங்களில் வருகை தரும் வெளிநாட்டுப் பறவைகளைப் பார்வையிடுவதற்கான, பறவைகள் பார்வைக் கோபுரம் நேற்றுத் திறக்கப்பட்டது.

மன்னார் பிரதான பாலத்துக்கும், தள்ளாடிச் சந்திக்கும் இடையில் உள்ள வங்காலை பறவைகள் சரணாலயம் பகுதியில் பறவைகள் பார்வைக் கட்டக் கோபுரம் அமைக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டச் செயலர் திருமதி எ. ஸ்ரான்லி டிமெல் மற்றும் யு.என்.டி.பியின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி றொபேர்ட் ஜுக்கம், சுற்றுச்சூழல் அமைச்சின் செயலாளர் அனில் ஜெயசிங்கவின் இணைப்பாளர் சாணக்க மகேஷினி, பறவைகள் சரணாலயம் திணைக்களத்தின் பணிப்பாளர் மஞ்சுள அமரரத்ன ஆகியோர் கோபுரத்தை இணைந்து திறந்து வைத்தனர். (ம-4-213)

# அபிவிருத்திக் குழுக்கூட்டம்: ஊடகவியலாளருக்கு மறுப்பு

வவுனியா, பெப். 2

வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழுக்கூட்டத்தில், மக்கள் நலன் சார்ந்து முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்கள் தொடர்பில், செய்தி சேகரிப்பதற்கு ஊடகவியலாளர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது.

வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா மற்றும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், மாவட்ட அபிவிருத்திக் குழு இணைத்தலைவருமான கு.திலீபன் ஆகியோரின் இணைத் தலைமையில் மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் கூட்டம் இடம்பெற்றது.

இதன்போது செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளருக்கு கூட்டம் ஆரம்பமாவதற்கு முன்னர் ஒளிப்படங்கள் எடுப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டது. எனினும் செய்தி சேகரிப்பதற்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்தது. இதனையடுத்து காலை 9 மணியில் இருந்து பிற்பகல் 2.15 மணி வரை ஊடகவியலாளர்கள் மண்டப வாயிலில் காத்திருந்து, கூட்டம் முடிவடைந்த பின்னரே செய்திகளைச் சேகரித்தனர். (ம-4-110)

# நூதன முறையில் பளையில் திருட்டு

பளை, பெப். 2

பளை பொலிஸ்பிரிவுக்குட்பட்ட முகமாலையிலுள்ள கடையொன்றில் வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த பெண்ணின் தங்கச் சங்கிலி அறுக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது: முகமாலையிலுள்ள கடை ஒன்றுக்கு மோட்டார் சைக்கிளில் இருவர் வந்துள்ளனர். அவர்களில் ஒருவர் கடைக்குச் செல்ல மற்றவர் மோட்டார் சைக்கிளில் நின்றுள்ளார். கடைக்குள் வந்த நபர் கடையில் இருந்த பெண்ணிடம் பொருள்கள் சிலவற்றைக் கேட்டுள்ளார். பொருளை பெண் எடுக்க முற்பட்ட வேளை அவரின் கழுத்தில் இருந்த தங்கச் சங்கிலியை அறுத்துக் கொண்டு அங்கிருந்து தப்பித்துச் சென்றுள்ளனர். சம்பவம் தொடர்பாக பளை பொலிஸார் விசாரணையை முன்னெடுத்துள்ளனர். (வ-113)



# மடு ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் பல்வேறு விடயங்கள் பரிசீலனை!

மன்னார், பெப். 2

மடு பிரதேசத்தின் இந்த வருடத்துக்கான முதலாவது பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம், பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்று இடம் பெற்றது.

கூட்டத்தில் பிரதேச வாரியாக மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டன.

சுகாதாரம், உள்ளூராட்சி மன்றங்கள், விவசாயம், கால்நடை, கல்வி, வீட்டுத்திட்டம், வீதி அபிவிருத்தி, சமுர்த்தி, நீர்பாசனம், வனவளம் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் தனித்தனியாக கலந்துரையாடப்பட்டன.

மடு பிரதேச செயலர் கே.நிஜாகரன் நெறிப்படுத்தலில், மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர் காதர் மஸ்தான் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சார்ள்ஸ் நிர்மலநாதன், வினோநோகராத லிங்கம் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள், திணைக்களத் தலைவர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ம-4-213)

# கிளிநொச்சி மாவட்டத்துக்கு ரூ. 550 மில்லியன் ஒதுக்கீடு

கிளிநொச்சி, பெப். 2

வரவு - செலவுத் திட்டம் மூலம், கிராம அபிவிருத்திக்காக கிளிநொச்சி மாவட்டத்துக்கு 550 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக, கிராம அமைப்புக்களின் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடல் கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. இதன்போது கிளிநொச்சி மாவட்டத்தில் மட்டும் 550 மில்லியன் ரூபா செலவில், 600க்கும் மேற்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ம-4-113)

# நுணாவில் சிறுவர் பூங்காவுக்கு 42 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு

சாவகச்சேரி, பெப். 2

நுணாவில் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள சிறுவர் பூங்காவுக்கு, 42 லட்சம் ரூபா செலவில் சிறுவர் முற்றம் அமைக்க நகரசபை விசேட அமர்வில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சித் திணைக்களத்தால், விசேட வேலைத் திட்டத்தின் கீழ், ஒதுக்கப்பட்ட 6 மில்லியன் ரூபா நிதியில் 42 லட்சம் ரூபா செலவில் சிறுவர் முற்றத்துக்கான விளையாட்டு உபகரணங்கள் பொருத்தவும், சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இயங்கும் முன்பள்ளிகளுக்கு கற்றல் உபகரணங்கள் கொள்வனவு செய்யவும் தீர்மானிக்கப்பட்டது. நுணாவில் மேற்குப் பகுதியில், சிறுவர் பூங்கா அமைக்க சபையால் நிதி ஒதுக்கப்பட்டு, காணி கொள்வனவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-4-9)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மக்களுக்கு அழிவை ஏற்படுத்தும் அபிவிருத்தியை உடன் நிறுத்துக

## சார்ள்ஸ் எம்.பி. வலியுறுத்து



**மன்னார், பெப். 2**

**மக்களுக்கு அழிவை ஏற்படுத்தக்கூடிய அபிவிருத்தித் திட்டங்களை, அரசு உடன் நிறுத்த வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் வலியுறுத்தினார்.**

மன்னார் நகரில் நேற்றுமுன் தினம் இடம்பெற்ற கவனவீர்ப்புப் போராட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தனியார் நிறுவனமொன்று, மன்னார் கடற்கரையோரமான பிரதேசங்களில் கனியவள மணல் அகழ்வு தொடர்பில் விளம்பரப்படுத்தியது. பின்னர் எமது எதிர்ப்பின் காரணமாக அந்தத் திட்டத்தைக் கைவிட்டனர். எனினும் இரவு வேளைகளில் மன்னார் பகுதியிலுள்ள கடற்கரைப் பிரதேசங்களில் மணலைப் பரீட்சித்துப் பார்க்கின்றனர். இது தொடர்பாக நான் நாடாளுமன்றத்தில் குரல் கொடுத்தபோது, மக்கள் இதை விரும்பாவிட்டால் நாங்கள் இதைச் செய்யமாட்டோம் என்று அப்போதைய அமைச்சர் பதிலளித்தார்.

மன்னார் தீவில் மணல் அகழ்வு நாளுக்குநாள் தீவிரமாகி வருகின்றது. மக்கள் வாழ முடியாத அளவுக்கு இட்டுச் செல்லும் ஒரு செயற்பாடாக அமைந்து வருகின்றது. எனவே அரசு இந்தத் திட்டத்தை உடன் கைவிட வேண்டும் - என்றார். (ம-4-60)

## மன்னாரில் அன்டிஜென் சோதனை

# நேற்றுமுன்தினம் மட்டும் 60 பேருக்கு கொரோனா



மன்னார் மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மேற்கொள்ளப்பட்ட அன்டிஜென் பரிசோதனையில் 60 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ரி.வினோதன் தெரிவித்துள்ளார்.

மன்னார் பொது மருத்துவமனையில் 16 பேரும், முசலி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 8 பேரும், வங்காலை மருத்துவமனையில் 7 பேரும், பேசாலை மருத்துவமனையில் 6 பேரும், மன்னார் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 5 பேரும், முருங்கன், தாராபுரம் ஆகிய மருத்துவமனைகளில் தலா 4 பேரும், அடம்பன் மருத்துவமனையில் 3 பேரும், தலைமன்னார், விடத்தல்தீவு மற்றும் மாந்தை மேற்கு மருத்துவமனைகளில் தலா 2 பேரும், எருக்கலம்பிட்டி மருத்துவமனையில் ஒருவருமாக 60 தொற்றாளர்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர்.

அத்துடன் மாவட்டத்தில் இதுவரை 3 ஆயிரத்து 384 தொற்றாளர்களும், 36 இறப்புக்களும் பதிவாகியுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4-60)

# மன்னாரைக் காப்பாற்ற ஒன்றுபட்டு எதிர்ப்போம்

## செல்வம் எம்.பி. அழைப்பு



மன்னார், பெப். 2

மக்களின் நலனைக் கருத்திற் கொள்ளாது மேற்கொள்ளப்படும் அபகரிப்பு நடவடிக்கைகளை அனைவரும் ஒன்றிணைந்து தடுத்து நிறுத்தவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் வலியுறுத்தினார்.

மன்னாரில் இடம்பெற்ற மண் அகழ்வுக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

இந்த நாட்டில் எமது மண்ணை அபகரிக்கும் நிகழ்வுகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. எமது பிரதேசத்தை, எமது மாவட்டத்தைக் காப்பாற்றுவதில் ஒவ்வொரு மாவட்டத்தையும் சார்ந்த பிரதிநிதிகளுக்கும், பொதுமக்களுக்கும் பொறுப்புண்டு. நாம் ஒன்றுபட்டு எமது எதிர்ப்பை வெளியிட வேண்டும் - என்றார். (ம-4-60)

# ஐயப்ப பத்தர்களுக்கு பொலிஸார் இடையூறு

## சபையில் கண்டனத் தீர்மானம்

சாவகச்சேரி, பெப். 1

பஜனைகளோடு யாத்திரை சென்று கொண்டிருந்த ஐயப்ப பத்தர்களை வழிமறித்து பொலிஸார் இடையூறு விளைவித்தமைக்கு, சாவகச்சேரி பிரதேசசபை அமர்வில் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சபையின் மாதாந்த அமர்வில், உறுப்பினர் அ.நிமலரோகன் கண்டனப் பிரேரணையை முன்வைத்து உரையாற்றினார்.

மறவன்புலோ ஸ்ரீ ஐயப்ப தேவஸ்தானத்தில் இருந்து மாலை அணிந்த சாமியார்கள், கட்டுவன் ஐயப்பன் கோவிலுக்கு மகேந்திரா வாகனத்தில் ஐயப்ப சாமி விக்கிரகத்துடன், பஜனைகளோடு யாத்திரை சென்று கொண்டிருந்தனர்.

இதன்போது வடக்கு மாகாண சபைக்கு அருகில் நின்ற சாவகச்சேரி போக்குவரத்துப் பிரிவைச் சேர்ந்த பொலிஸார் அவர்களை வழிமறித்து, தங்களுக்கு மரியாதை தரவில்லை பஜனைகளை நிறுத்துங்கள் என்று உரத்த குரலில் மிரட்டினர். வாகனச் சாரதியின் சாரதி அனுமதிப் பத்திரத்தை பறித்து சிங்களத்தில் எழுதி, பிரதி ஒன்றை தந்து "நீங்கள் தண்டப் பணம் கட்ட வேண்டும்" என்றனர். இந்தச் செயலானது எமது சைவ வழிபாடுகளை தடுத்து, அவமதிக்கும் செயற்பாடாக உள்ளது. எந்தவொரு வழிபாடுகளாக இருந்தாலும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமே தவிர இடையூறு ஏற்படுத்தக் கூடாது என்று பிரேரணை சமர்ப்பித்தார். இது சபையில் நிறைவேற்றப்பட்டது. (ம-4-159)





**இரவல் சீலையில ஒய்யாரம் போடுறதெண்டால் எங்கட ஆக்களுக்கு தனி விருப்பம். அப்பிடித்தான் இப்பவும் இரவல் விசயங்களை, தங்கட கெட்டித்தனம் மாதிரிக் காட்ட சில டிப்பார்ட்மெண்ட்காரர் ஆசைப்படுகினமாம். இது யாழ்ப்பாணத்தில நிறைய நெல்லுவயல் செய்யிற இடமொண்டில நடந்த சம்பவம்.**

**வழக்கமா அந்த இடத்தில ஏக்கர் கணக்கில நெல்லுச் செய்தால், மூடைக்கணக்கில விளைச்சல் கொட்டும். ஆனால் அதுக்கேத்தபடி அடி உரம் போட்டு, புல்லு மருந்து அடிச்சு, காய் உரம் போட்டு பரமாரிக்க வேணும். இதுக்கெல்லாம் பூச்சி மருந்து, புல்லு மருந்து, யூரியா, பொட்டாசியம் எண்டு உரவகைகள் எல்லாம் மனமாப் பாவிப்பினம். அதால தான் இப்பிடி விளைச்சல். இந்த வருசம் அதுக்கு அரசாங்கம் ஆப்படிச்சிட்டுது. இயற்கை உரத்தை தாறம் எண்டு சொல்லி அதுவும் சரியான நேரத்துக்கு கிடைக்கேலை. கமக்கந்தோரில குடுத்த திரவ உரவமும் நுரைச்சு பொங்கி ஊத்திச்சே தவிர நெல்லுக்கு சங்குதான் ஊதிச்சுது. அதால கனபேர் உந்த இயற்கை உர விளையாட்டு, கடைசியில வயித்தில அடிக்கிற வினையாப் போகுமெண்டதை கண்டுபிடிச்சிட்டினம். அதால சில உரக்கடைகாரர் பதுக்கி வைச்சிருந்த யூரியா உரத்தை ஒரு மூடை 25 ஆயிரம் ரூபாப்படி குடுத்து அதை வாங்கி வயலுக்குப் போட்டிருக்கினம். நோர்மலா ஒரு மூடை யூரியா வின்ர விலை 2500 ரூபாவுக்கும் குறையத்தான். ஆனால் எங்கட அரசாங்கம் செய்த புண்ணியத்தால பதுக்கல்காரருக்கு பத்துமடங்கு லாபம்.**

**ஆனைவிலை, குதிரை விலை எண்டாலும் உரத்தை வாங்கிப் போட்டால் வயலுக்க கொஞ்சமெண்டாலும் நெல்லைப் பாக்கமுடியுமெண்டதால, வேற வழியில்லாமல்தான் அப்பிடி காசைக் கரியாக்கினவை. எண்டாலும் அரசாங்கம் குடுத்த திரவ உரம் கைவிட்டாலும், பழைய ஸ்டொக்கில இருந்த யூரியா கைவிடேலை. அறாவிலைக்கு யூரியாவை வாங்கிப் போட்டவைக்கு விளைச்சல் பரவாயில்லையாம். ஆனால் இந்த இடத்திலதான் இரவல் சீலைக்கு கமக்கந்தோர்காரர் ஓடிவந்திருக்கினம். யூரியா போட்டு விளைஞ்ச நெல்லு வயல்களை அந்த விவசாயிகளையும் அங்க நிக்கவைச்சு, 'இயற்கை உரத்தால் அமோக விளைச்சல்' எண்டு காட்டுறமாதிரி படமெடுத்து மேலிடத்துக்கு அனுப்ப வெளிக்கிட்டவையாம். ஆனால் கமக்காரருக்கு கடும் கோபம்.**

**"சும்மா இருந்த யூரியா விலையையும் கூட்ட வைச்சு, தாறமெண்டு சொன்ன இயற்கைப் பசளையும் தராமல் பேய்க்காட்டிப் போட்டு, இப்ப யூரியா போட்டு விளைஞ்ச வயலை, இயற்கை விவசாயத்தால தான் இப்பிடி நல்ல விளைச்சல் எண்டு பிளேட்டை மாத்த நாங்கள் இடம்தர மாட்டம். நீங்கள் போய், இயற்கை உரம் பாவிச்ச ஆக்களின்ர வயலைப் படமெடுத்து அனுப்புங்கோ. எங்களை விட்டிடுங்கோ" எண்டு பேசிக்கலைச்சுப் போட்டினம். ஆனாலும் கமக்கந்தோர்காரர், ஆரும் இளிச்சவாய் விவசாயிமார் கிடைச்சால் அவையின்ர வயலை, இயற்கை விவசாயத்தால் தான் இப்பிடி அமோக அறுவடை எண்டு படம் எடுத்து சனத்தைப் பேய்க்காட்ட ஆலாய்ப் பறக்கினமாம். என்ன படமெடுத்தாலும் சனத்துக்கு உண்மை தெரியுமெண்டது ஏன் இவைக்கு விளங்குதில்லை?**



- பூட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுமுறைக் காலத்தில் அவதானம் மிகத்தேவை

## மருத்துவர் ஹேமந்த ஹேரத் கோரிக்கை

கொழும்பு, பெப். 2 எதிர்வரும் நீண்ட வார இறுதி விடுமுறையில் பொது இடங்களுக்குச் செல்லும்போது மக்கள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் என்று சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் ஹேமந்த ஹேரத் கோரிக்கை விடுத்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், இதன்போது நாட்டிலுள்ள மக்கள் அனைவரும் உரிய சுகாதார நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என்பதுடன் முடிந்தவரை பயணங்களை மேற்கொள்ளாமல் இருக்கவும் முயற்சிக்க வேண்டும். மேலும் நாட்டில் கிட்டத்தட்ட 15 மில்லியன் மக்கள் இரண்டாவது டோஸை எடுத்துக் கொண்ட போதிலும் இதுவரையில் 5 மில்லியன் பேர் மட்டுமே மூன்றாவது டோஸைப் பெற்றுள்ளனர் -என்றார். (ய-இ)

# டெங்கு நுளம்பு பெருகும் இடங்கள் ட்ரோன் கமெரா மூலம் தேடுதல்

கொழும்பு, பெப். 2

டெங்கு நுளம்புகள் பெருகும் இடங்களை இனங்காண்பதற்காக ட்ரோன் கமெரா மூலமான விசேட தேடுதல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மேல் மாகாண ஆளுநர் ரொஷான் குணதிலகவின் வழிகாட்டலின் கீழ் முதற்கட்டமாக ஹொரணையில் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டது. (ய-இ)

# பாடசாலைகளைப் பூட்டுங்கள் தவறினால் பெரும் ஆபத்து

## பியசிறி பொன்னாண்டோ எச்சரிக்கை

கொழும்பு, பெப். 2

கொரோனா பரவலால் மாணவர்களின் பாதுகாப்புக் கருதி நாடுமுழுவதிலும் உள்ள பல்வேறு பாடசாலைகளின் வகுப்புகள் மூடப்பட்டுள்ளன என இலங்கை அதிபர்கள் சங்கத்தின் செயலாளர் பியசிறி பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

நாட்டின் தற்போதைய நிலைமையை கருத்திற்கொண்டு நாட்டிலுள்ள அனைத்துப் பாடசாலைகளையும் விரைவாக மூட வேண்டும். இல்லையேல் சாதாரண தர, உயர்தர பரீட்சைகளுக்குத் தோற்றும் மாணவர்கள் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க நேரிடும் எனவும் அவர் எச்சரித்துள்ளார். (வ-இ)



# பசுமையான இலங்கை திட்டம் முன்னெடுப்பு!

பசுமையான இலங்கை 'ஒரு மரம் ஒரு மனிதம்' எனும் தேசிய வேலைத்திட்டம், வவுனியா பண்டாரிக்குளம் கிராம அலுவலர் பிரிவில் நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

பண்டாரிக்குளம் காவல் அரண் பொறுப்பதிகாரி திலகரத்ன தலைமையில், முதற்கட்டமாக பண்டாரிக்குளம் பகுதியில் மரக்கன்றுகள் நடுகை செய்யப்பட்டன. பொதுமக்களின் வீடுகளில் நடுவதற்கான மரக்கன்றுகளும் வழங்கப்பட்டன. (ம-4-18)

### கிளிநொச்சியில்

# 4 நாள்களில் மட்டும் 200 பேருக்கு தொற்று

கிளிநொச்சி, பெப். 2

**கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த 4 நாள்களில் மட்டும் 200 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று மாவட்ட தொற்று நோயியல் மருத்துவர் நிமால் அருமைநாதன் தெரிவித்துள்ளார்.**


கடந்த நான்கு நாள்களில், பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டவர்களில் 200 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இவர்களில் 50 பேர் மாணவர்கள். அவர்களில் 16 வயதுக்குட்பட்டவர்கள் 43 பேர். அத்துடன் இரண்டு கர்ப்பிணிகளுக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

தற்போது மாவட்டத்தில் தொற்றுப் பரவும் வேகம் அதிகரித்துள்ளதால் பொதுமக்கள் கண்டிப்பாக சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

தடுப்பூசிகளை முழுமையாகச் செலுத்த வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (ம-ய-4-113,214)

# தென்மராட்சி பிரதேசத்தில் அதிகரிக்கும் தொற்றுக்கள்



சாவகச்சேரி, பெப். 2 தென்மராட்சிப் பிரதேசத்தில் ஜனவரி மாதத்தில் மட்டும் நூற்றுக்கு மேற்பட்டோர் கொரோனா, டெங்கு, எலிக்காய்ச்சல் உள்ளிட்ட தொற்று நோய்களால் பீடிக்கப்பட்டுள்ளனர். அதற்கமைவாக கொரோனாவால் 68 பேரும், டெங்கால் 32 பேரும், எலிக் காய்ச்சலால் 15 பேரும் பீடிக்கப்பட்டுள்ளனர்.

தற்போது சுகாதார விதிமுறைகள் சிறிது தளர்த்தப்பட்டுள்ள நிலையில், கட்டுப்பாடற்ற பயணங்கள், சுகாதார விதிமுறைகள் புறக்கணிப்பு போன்ற செயல்களால் கொரோனாத் தொற்று தீவிரமாகப் பரவி வருகின்றது.

அதேவேளை தற்போது எலிக்காய்ச்சலால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கையும், டெங்குத் தொற்றாளர்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றது என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. (ம-4,9)

# க.பொ.த உ/த பரீட்சை தொடர்பான பிரத்தியேக வகுப்புகளுக்குத் தடை

கொழும்பு, பெப். 2

க.பொ.த உயர்தர பரீட்சையை இலக்காகக் கொண்டு பாடம் சார்ந்த கருத்தரங்குகள் அல்லது வகுப்புக்களை ஏற்பாடு செய்தல், நடத்துதல், பரீட்சை சார்ந்த வினாத்தாள்களை அச்சிடுதல், விநியோகித்தல் ஆகியவை தடை செய்யப்பட்டுள்ளன என்று பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மாதிரி வினாத்தாள்களை வழங்குவதாகக் கூறி மின்னணு ஊடகங்கள், சுவரொட்டிகள் மற்றும் பதாகைகள் மூலம் விநியோகம் மற்றும் விளம்பரம் செய்வதும் தடை செய்யப்பட்டுள்ளது என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எல்.எம்.டி.தர்மசேன தெரிவித்தார். (ய-இ)

# தற்போதுள்ள சுகாதார வழிகாட்டல் சுற்றறிக்கை நீடிப்பு

கொழும்பு பெப். 2 கொரோனா வைரஸ் தொற்றை தடுப்பது தொடர்பான சுற்றறிக்கை பெப்ரவரி 28ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்று சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவித்ததாவது, சுகாதார அமைச்சகம் வெளியிட்டுள்ள வழிகாட்டுதல்களை அவ்வப்போது புதுப்பித்து வருகிறோம். தற்போது நடைமுறையில் உள்ள வழிகாட்டுதல் சுற்றறிக்கை ஜனவரி 31ஆம் திகதியுடன் நிறைவடைகிறது. இந்த நிலையில், அதனை பெப்ரவரி 28ஆம் திகதி வரை நீடிக்க சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் நடவடிக்கை எடுத்துள்ளார். இதேவேளை, இதுவரை நிர்ணயிக்கப்பட்ட கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு செயற்படுமாறு அனைவரையும் கேட்டுக்கொண்டுள்ளார். (ம-ய-இ)

# விண்ணப்பம் கோரல்

கொழும்பு, பெப். 2 கொழும்புத் தமிழ்ச் சங்கம் நடத்தும் தமிழ்ப் பட்டயச் சான்றிதழ் கற்கை நெறிக்கு விண்ணபங்கள் கோரப்பட்டுள்ளன. இலவசமாக நடத்தப்படும் இக்கற்கை நெறிக்கு ஆசிரியர்கள், ஊடகவியலாளர்கள், இலக்கியச் செயற்பாட்டாளர்கள், உயர்தர வகுப்பு மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் உட்பட ஆர்வமுள்ள அனைவரும் விண்ணப்பிக்க முடியுமென்று கல்விக்குழு தெரிவித்துள்ளது.

அத்துடன், கற்கை நெறிக்கு நேர்முகப் பரீட்சை ஒன்றின் மூலம் அடிப்படைத் தகைமைகளைப் பெற்ற மாணவர்களே அனுமதிக்கப்படுவர். கற்கைநெறிக்கான விரிவுரைகள் மொழித் துறைப் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் தமிழ் இலக்கிய, இலக்கணத் துறைசார்ந்த வளவாளர்கள் ஆகியோரால் நிகழ்த்தப்படும். விண்ணப்பிக்க விரும்புவர்கள், பொதுச் செயலாளர் கொழும்புத் தமிழ்ச் சங்கம் இல07 சங்கம் மாவத்தை கொழும்பு 06 என்ற முகவரிக்கு சுயவிவரக் கோவையை அனுப்பி வைக்குமாறு கல்விக் குழு கோரியுள்ளது. (ம-ரி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## ஏனிந்தப் பகையுணர்வு?

இந்திய – இலங்கைக் கடலெல்லை மீண்டும் பதற்றமாகியுள்ளது. தமிழக மற்றும் ஈழ மீனவர்களுக்கு இடையிலான முரண்பாடுகள் நாளுக்குநாள் வலுப்பெற்றுவருகின்றன. தமிழக மீனவர்கள் ஈழ மீனவர்களுக்கும் இலங்கைக் கடற்படைக்கும் எதிராகவும், ஈழ மீனவர்கள் தமிழக மீனவர்களுக்கு எதிராகவும் போராட்டத்தில் குதித்துள்ளனர். இரு தரப்பு மீனவர்களுக்கும் இடையிலான பிரச்சினையாக இது இருக்கும் வரை இந்த விவகாரத்தில் ஓரளவு புரிந்துணர்வு இருக்கவே செய்தது. ஆனால், எப்போது மீனவர்களின் விடயத்தில் அரசியல் கலக்கப்பட்டு அது பிராந்திய முக்கியத்துவம் மிக்க விடயமாக மாற்றப்பட்டதோ அப்போதே இது தீர்க்கப்பட முடியாத – தீர்க்கப்பட விரும்பாத – பிரச்சினையாக மாறிவிட்டது.

இந்தியாவுக்கும் – இலங்கைக்கும் இடையிலான ஆதியான உறவே, தமிழக மற்றும் ஈழ மீனவர்களின் பரஸ்பர புரிந்துணர்விலும் பாசத்திலும் கட்டியெழுப்பப்பட்டதுதான். போர்க்காலத்தில் ஈழ மீனவர்கள் மீன்பிடிப்பதற்கு இங்கு தடை விதிக்கப்பட்டிருந்தது. சில கடற்பரப்புக்களில் மிகக் குறுகிய பகுதிக்குள் மட்டுமே மீன்பிடிக்க அனுமதி வழங்கப்பட்டு இறுக்கமாகக் கண்காணிக்கப்பட்டது. இந்த நிலைமைகளாலும் கூடவே ஏற்படுத்தப்பட்டிருந்த பொருளாதாரத் தடைகளாலும் தமிழர் தாயகம் நலிவடைந்திருந்தது. இந்த இக்கட்டான சூழலில் தமது உயிரையும் பணயம் வைத்து வடக்கு மக்களுக்கான அத்தியாவசியப் பொருள்களையும் மருந்துகளையும் ஏனைய தொடர்பாடல்களையும் பரிமாறிக் கொண்டதில் எம் தொப்புள்கொடி உறவுகளான தமிழக மீனவர்களின் பங்கு மறக்க முடியாதது – உயர்வானது – மேன்மையானது.

இலங்கைக் கடலில் ஈழத்தமிழ் மீனவர்கள் இறங்க முடியாது என்பதால் அந்தக் காலகட்டத்தில் தமிழக மீனவர்களின் பிரதான மீன்பிடித் தளங்களாக வடக்குக் கடலோரங்கள் மாறின. அந்தப் பழக்கமே போருக்குப் பின்னும் தொடர்ந்தது. ஆனால் இப்போது நிலைமை வேறு. கடற்பகுதி முழுவதும் இலங்கைத் தமிழ் மீனவர்களுக்காக திறக்கப்பட்டுவிட்டது. ஆகவே, யார் எங்கே மீன்பிடிப்பது என்ற பிரச்சினை எழுந்தது. கடந்த இரண்டு தசாப்தங்களாக மீன்பிடித்துப் பழகிய இடத்தை விட்டுவிட தமிழக மீனவர்கள் தயாரில்லை. அதேபோன்று தமது பூர்வீகக் கடலில் இன்னொரு தரப்பு மீன்பிடியில் ஆதிக்கம் செலுத்துவதை ஈழ மீனவர்களும் விரும்பவில்லை. தாயும் பிள்ளையும் ஒன்றாயினும் வாயும் வயிறும் வேறுதானே. இதுதான் இந்த யதார்த்தச் சிக்கல் நிலைக்குக் காரணம்.

'தமிழகத்தவர்கள் எம் தொப்புள்கொடி உறவுகள்' என்று எம்மவர்களும் சிந்திக்கவில்லை, 'போரால் நலிவடைந்தவனின் பொருளாதாரம் இனியாவது மேம்பட்டும். நாம் அத்துமீறாது இருப்போம்'என்று தமிழக மீனவர்களும் சிந்திக்கவில்லை. பொருளாதார நோக்கத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து தமது உறவு நிலையை இருதரப்பு மீனவர்களும் மீளாய்வு செய்தமையால் இன்று பகைமை வேரூன்றி, அது கொழுந்துவிட்டு எரிகின்றது.

நவீன ஜி.பி.எஸ். கருவிகளின் உதவியுடன் மீனவர்களின் பரஸ்பர அத்துமீறலைக் கண்காணிக்க – தடுக்க இரு தரப்பு அரசுகளாலும் இயலும். உண்மையில் இது மிகச் சாதாரணமாக நடைமுறைப்படுத்தக்கூடிய விடயம். ஆனால், அதைச் செய்வதற்கு இரு அரசுகளும் தயாரில்லை. ஏனென்றால் தமிழக மீனவர்களுக்கும், ஈழ மீனவர்களுக்கும் இடையிலான பகைமைத் தீ எவ்வளவு தூரம் கொழுந்துவிட்டு எரிகின்றதோ அரசுகளின் பிராந்திய நலனுக்கு அது அவ்வளவு தூரம் தேவை. எமக்கிடையிலான பகைமைத் தீயில் இரை கௌவிகள் குளிர் காய்கின்றன. தமிழக, ஈழ உறவென்பது இன்றோ நேற்றோ வந்ததல்ல. உட்கார்ந்து யோசித்தான் பாருங்களேன்!

நாளொரு நல்வார்த்தை

"இப்பொழுதே மகிழ்ச்சியாக இருக்கக் கற்றுக்கொள்ளுங்கள். இன்னும் துன்பங்கள் வரக் காத்திருக்கின்றன".
- பிரேண்டர் ஜோன்சன்




சிறுவர்களுக்கு

# அறிகுறிகள் தென்படின் மருத்துவரை நாடுங்கள்

## மருத்துவர் ஆலோசனை

**கொழும்பு, பெப். 2**

**சிறுவர்களுக்கு கொரோனாத் தொற்றுக்கான அறிகுறிகள் தென்படின், உடனடியாக அவர்களை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லவேண்டும் என்று லேடி ரிட்ஜ்வே சிறுவர் மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் ஜி.விஜேசூரிய தெரிவித்துள்ளார்.**

மருத்துவர்களின் ஆலோசனைக்கு அமைவாக தொற்றுக்குள்ளான பிள்ளைகளை வீட்டில் வைத்து சிகிச்சையளிக்க வேண்டும். அவர்களுக்கு தொற்றுக்கான அறிகுறிகள் காணப்படுமாக இருந்தால் காலந்தாழ்த்தாது அவர்களை உடனடியாக மருத்துவமனையில் சேர்க்க வேண்டும்.

மாரவில மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட சிறுமியொருவர், மறுநாளே கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளார். இவர் அதிகமாக நிமோனியா நிலைக்குச் சென்றதன் காரணமாக உயிரிழந்துள்ளார். ஒரேநாளில் இவ்வாறு நிமோனியா நிலைக்குச் செல்ல முடியாது. எனவே பிள்ளைகளுக்கு தொற்றுக்கான அறிகுறிகள் இருந்தால், அவர்களை உடனடியாக மருத்துவமனைக்கு அழைத்து செல்ல வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ம-4-இ)


யாழ்ப்பாணத்தில்

# கார் தடம்புரண்டு விபத்து மூவர் மருத்துவமனையில்

யாழ்ப்பாணம், பெப். 2

வேகக்கட்டுப்பாட்டை இழந்த கார் தடம்புரண்டு விபத்துக்குள்ளானதில், அதில் பயணித்த மூவர் காயமடைந்தனர்.

இந்த விபத்து யாழ்ப்பாணம் பண்ணைப் பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்றது. விபத்தில் காரில் பயணித்த மூவர் காயமடைந்தனர். அவர்கள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். ஒருவர் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார். (ம-4-125-23)



நாளை 03.02.2022 வியாழக்கிழமை தை 21
சுபநேரம் : 08.05 - 09.35
ராகுகாலம் : 02.05 - 03.35

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈர நிலங்கள்

## மக்களுக்கும் இயற்கைக்குமான வரங்கள்



கலாநிதி திருமதி சுபாஜினி உதயராசா,
சிரேஷ்ட விரிவுரையாளர்,
புவியியற்றுறை
யாழ். பல்கலைக்கழகம்

**இன்று உலக ஈர நிலங்கள் தினம். அதை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.**

உலகெங்கிலும் உள்ள ஈரமான புல்வெளிகள், ஆறுகள், கழிமுகங்கள், கழிமுக கடலோர குடியிருப்புப் பகுதிகள், பவளத்திட்டுக்கள், தாழ்வான நிலங்கள், குளம், குட்டைகள், ஏரிகள், மீன்குளங்கள், நீர்த்தேக்கங்கள், நெல்வயல்கள், சதுப்புநிலங்கள், சதுப்பு நிலக்காடுகள் உள்ளிட்ட அனைத்தும் ஈரநிலங்கள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பாக இயற்கையான சூழலில் அமைந்துள்ள, வருடம் முழுவதும் நீரினால் மூழ்கியுள்ள பிரதேசம் அல்லது காலத்துக்குக் காலம் நீரினால் மூழ்கும் பிரதேசங்கள் 'ஈரநிலங்கள்' என்று அழைக்கப்படுகின்றன. இவை புவிமேற்பரப்பில் பல்வேறுபட்ட அங்கிகளுக்கு ஆதாரமாக விளங்குவதோடு இயற்கைச் சமநிலையைப் பேணும் ஒரு களமாகவும் தொழிற்படுகின்றன. ஈரநிலங்களே உலகில் மிக உற்பத்தித்திறன் கூடிய உயிர்ச் சூழலியல் முறைமையாகக் கருதப்படுகின்றன.

ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு ஆய்வுப்பொருளை அடிப்படையாகக் கொண்டு உலக ஈரநில தினம் கொண்டாடப்பட்டு வருகின்றது. அந்தவகையில் 2022ஆம் ஆண்டினுடைய உலக ஈரநில தினத்தின் சர்வதேச ஆய்வுப் பொருள் 'மக்கள் மற்றும் இயற்கைக்கான ஈரநிலங்களின் செயற்பாடு' என்பதாகும்.

### ஈரநிலங்களின் முக்கியத்துவம்

ஈரநிலங்களில் பலதரப்பட்ட உயிரினங்களைக் காண முடியும். பல ஈரநில உயிரினங்களுக்கு இந்தப்பிரதேசங்கள் இருப்பிடமாக இருப்பதே இதற்குக் காரணமாகும். அங்கு வசிக்கும் உயிரினங்களுக்கும் வசிக்காத உயிரினங்களுக்கும் தேவையான உணவுகள் ஈரநிலங்களில் காணப்படுகின்றன. மண்ணில் காற்று குறைவடையும் போது அதற்கு ஈடுகொடுக்கும் வகையிலான விசேட ஏற்பாடுகள் இங்குள்ள தாவரங்களில் உண்டு. நன்னீரிலும், களப்பிலும் வசிக்கும் நத்தைகள், வண்ணத்துப்பூச்சிகள், இறால்கள், சிங்கி இறால்கள், மீன் இனங்கள், பட்சிகள், பாலூட்டிகள், ஈரூடக வாழிகள், ஊர்வன என்பனவும் ஈரநிலங்களுக்கு உரியனவாகும். ஈரநிலங்கள் சுற்றுலாப் பறவைகளுக்கும் தற்காலிக இருப்பிடங்களாக உள்ளன. பொதுவாக ஈரநிலங்களின் பயன்பாட்டை பொருளாதார முக்கியத்துவம், கலாசார மற்றும் சமூகம்சார் முக்கியத்துவம் என்று இரண்டு வகையாக பிரித்து நோக்கலாம்.

பொருளாதார முக்கியத்துவம் என்பதனுள் மீன்பிடி, நீர்மின் உற்பத்திகள், போக்குவரத்து, கைத்தொழில் விருத்தி, விவசாயம் போன்றன உள்ளடங்குகின்றன. ஈரநிலங்களின் சமூக, கலாசார முக்கியத்ததுவம் என்னும்போது இவை மக்களிடையே அழகியற் தன்மையை ஏற்படுத்துவதோடு சுற்றுலாப் பயணம், ஆய்வு நடவடிக்கைகள், கல்வி நடவடிக்கைகள் போன்றவற்றையும் விருத்தி செய்கின்றன.

இவற்றினைத் தவிர ஈரநிலங்கள் மறைமுகமான ரீதியிலும் தமது பங்களிப்பை புவிக்கு வழங்கி வருகின்றன. அந்த வகையில்,

- உயிரின பல்வகைமையை பேணுதல்
- நீரியல் வட்ட சமநிலையைப் பேணுதல்
- காலநிலை மாற்றம், இயற்கைச் சமநிலை என்பவற்றைப் பேணுதல்.
- இயற்கை இடர்களைத் தடுத்தல்.
- கிணற்று நீர் மாசடைவைத் தடுத்தல்.

ஆகியவற்றைச் செய்கின்றன.

### உயிர்பல்வகைமை நிறைந்த ஈரநிலங்கள்

ஈரநிலங்களில் பலதரப்பட்ட உயிரினங்களைக் காண முடியும். பல ஈரநில உயிரினங்களுக்கு இந்தப்பிரதேசங்கள் இருப்பிடமான இருப்பதே இதற்குக் காரணமாகும். அங்கு வசிக்கும் உயிரினங்களுக்கும், வசிக்காத உயிரினங்களுக்கும் தேவையான உணவுகள் ஈரநிலங்களில் காணப்படுகின்றன. மண்ணில் காற்று குறைவடையும்போது அதற்கு ஈடுகொடுக்கும் வகையிலான விசேட ஏற்பாடுகள் இங்குள்ள தாவரங்களில் உண்டு. நன்னீரிலும், களப்பிலும் வசிக்கும் நத்தைகள், வண்ணத்துப்பூச்சிகள், இறால்கள், சிங்கி இறால்கள், மீன் இனங்கள், பட்சிகள், பாலூட்டிகள், ஈரூடக வாழிகள், ஊர்வன என்பனவும் ஈரநிலங்களுக்கு உரியவையாகும். ஈரநிலங்கள் சுற்றுலாப் பறவைகளுக்கும் தற்காலிக இருப்பிடமாக உள்ளன. ஈரநிலங்கள் தமது அங்கிகளுக்கு சிறந்த வாழ்க்கைத் தரத்தை வழங்குவதோடு அவற்றின் செயற்பாடுகளையும் விருத்தி செய்து பேணுகின்றன. இதன் மூலம் அங்கிகளின் பல் இனத்தன்மை அதிகரிக்கப்பட்டு அங்கிகளுக்கு இடையே இயற்கைச் சமநிலை பேணப்பட்டு உயிர்பல்வகைமை பாதுகாக்கப்படுகின்றது. இதேபோன்று நீரியல் வட்டத்திலும் பங்களிப்பு செய்கின்றன. ஆவியாக்கம், படிவு வீழ்ச்சி இவை இரண்டையும் சமநிலையில் வைத்திருக்கும் இடமாகவும் இவை விளங்குகின்றன. இதன் மூலம் நீரியல் வட்டம் சீரான சமநிலைத் தன்மையில் இயங்குவதோடு அங்கிகளுக்கு இடையே ஓர் இயற்கை சமநிலையையும் பேணுகின்றது. இதன் காரணமாக காலநிலை மாற்றங்களான அதிக வெப்பநிலை, அதிக படிவு வீழ்ச்சி, உயர்ந்த வளிமண்டல அமுக்கம், மற்றும் வெள்ளப்பெருக்கு, வறட்சி போன்ற காலநிலையில் ஏற்படும் மாற்றங்களை சிறந்த முறையில் கட்டுப்படுத்துகின்றன. குறிப்பாக ஈரநிலங்கள் நீரோட்டத்தை ஒழுங்குபடுத்தி வெள்ளப்பெருக்கை கட்டுப்படுத்துகின்றன. அத்துடன் கரையோர சதுப்பு நிலங்களின் ஊடாக தரைக்கீழ்நீர் ஓடுவதன் மூலம் உவர்நீர் ஊடுருவுவதை தடை செய்கின்றது. இதன் காரணமாக கிணற்று நீர் மாசடைவது தடுக்கப்படுகின்றது. மேலும் நீரைச் சேமித்து வைத்து சுத்திகரிக்கும் தனித்தன்மையான சூழலியல் சேவைகளைச் செய்தல்,அலைச் செயற்பாடுகள், புயல் போன்றவற்றின் தாக்கத்தை கண்டல் தாவரங்கள் மூலம் தடுத்தல் அதாவது இவை வேர்களின் மூலம் வண்டலை இறுக பற்றிப் பிடிப்பதனால் அலை மற்றும் புயல் தாக்கத்தை குறைப்பதுடன் நீர் நிலைகளை அடையக்கூடிய நச்சுப் பொருள்களை தடுப்பதன் மூலம் நீர் மாசடைவதை தடுக்கின்றன. இவ்வாறான சேவைகளை மக்கள் மத்தியில் வழங்கி ஈரநிலங்கள் வெறுமையான நிலங்கள் அல்ல அவை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை என்ற கருத்தை வெளிப்படுத்துகின்றன.

### இலங்கையில் ஈரநிலங்கள்

இலங்கையில் பலதரப்பட்ட ஈரநிலங்களைக் காணமுடியும். இவற்றுள் 'ரம்சார் ஈரநிலங்கள்' (ரம்சார் என்பது ஈரானில் உள்ள நகரொன்றின் பெயர். ஈர நிலங்களை பாதுகாப்பதற்கான ஒப்பந்தம் அந்த நகரில்தான் முதன் முதல் மேற்கொள்ளப்பட்டது) என்று பெயரிடப்பட்ட ஈர நிலங்களும் உள்ளடங்குகின்றன. நமது நாட்டில் ஈர நிலங்களைப் பிரதானமாக இயற்கை ஈரநிலம், செயற்கை ஈரநிலம் என இரண்டாக வகுக்கலாம். இவ்விரண்டையும் நன்னீர் ஈரநிலம், உவர்நீர் ஈரநிலம்,சவர்நீர் ஈரநிலம் என்று மேலும் மூன்று பிரிவுகளாகப் பிரித்தறிய முடியும். 2013ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் வரையில் இலங்கையில் ஆறு ஈரநிலங்கள் ரம்சார் ஈரநிலங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. அவையாவன:

- பூந்தல தேசியவனம்
- ஆனவிழுந்தாவ வாவிகள் தொகுதி (சரணாலயம்)
- மாதுகங்கை
- குமண குடும்பிகல சரணாலயம்
- வங்காலை சரணாலயம்
- வில்பத்து சரணாலயம்

என்பனவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரம்சார் ஈரநிலமாக பிரகடனப்படுத்தப்பட்ட இலங்கையின் முதலாவது தேசியவனமாக பூந்தல தேசிய வனவியில் பூங்கா கருதப்படுகின்றது. பதினேழு தீவுகளைக் கொண்ட கண்டல் தாவரங்களால் சூழப்பட்ட மாதுகங்கை ஈரநிலமானது 2003ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 11ஆம் திகதி சர்வதேச ரம்சார் ஈரநிலப் பகுதியாக பிரகடனப்படுத்தப்பட்டது.

2001ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 3ஆம் திகதி சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த ரம்சார் ஈரநிலமாக ஆன விழுந்தாவ ஈரநிலம் பிரகடனப்படுத்தப்பட்டது. 2010ஆம் ஆண்டு ஒக்ரோபர் 29ஆம் திகதி குமண குடும்பிகல சரணாலயம் ரம்சார் ஈரநிலமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. முட்புதர்கள் கொண்ட அடர்ந்த காடுகள், கடற்புல்வெளிகள், களப்புகள், கண்டல்காடுகள், உவர்நீர் சதுப்பு நிலங்கள், ஆழமற்ற கடல்பகுதி, மணல் குன்றுகள் ஆகிய சூழல் தொகுதிகளைக் கொண்ட வங்காலை சாரணாலயம் (மன்னார்) 2010ஆம் ஆண்டு ஜூலை மாதம் 12ஆம் திகதி சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த ரம்சார் ஈரநிலமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. 1938ஆம் ஆண்டில் வில்பத்து மிகவும் பெரிய சரணாலயமாக பிரகடனப்படுத்தப்பட்டாலும் 2013ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 2ஆம் திகதியே சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த ரம்சார் ஈரநிலமாக பிரகடனப்படுத்தப்பட்டது. இது 131, 693 ஹெக்ரேயர் பரப்பளவை உள்ளடக்கியுள்ளது.

### ஈரநிலங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்

உலக மக்களுக்கு ஏராளமான நன்மைகளைச் செய்து வரும் ஈரநிலங்கள் பல்வேறு வகையான பிரச்சினைகளையும் எதிர்கொண்டு வருகின்றன. குறிப்பாக உலகில் அதிகரித்துவரும் சனத்தொகை காரணமாக ஈர நிலங்கள் சம அளவிலும், பரம்பலிலும் பல்வேறு மாற்றங்களையும், பிரச்சினைகளையும் எதிர்நோக்கி வருகின்றன. இதன்காரணமாக ஈரநிலங்கள் தற்போது அழிவடைந்து கொண்டும், மாசடைதலுக்கு உட்பட்டும் வருகின்றன. மிதமிஞ்சிய நீர்ப்பாவனை, நீரின் தரத்தில் ஏற்படும் மாற்றங்கள் குறிப்பாக உவர்த்தன்மை அதிகரிப்பு, அளவுக்கு அதிகமான மீன்பிடி, பொருத்தமற்ற மீன்படி முறைகள், பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களுக்காக நிலம் நிரப்பப்படுத்தல், முருகைக் கற்பார் அகழ்தல், சிப்பி அகழ்தல், மண் அகழ்தல், விவசாயத்துக்கு மிதமிஞ்சி உரமிடல், நகரசபைக்கழிவுகள், கைத்தொழிற்சாலைக் கழிவுகள், திட்டமிடப்படாத நிலப்பயன்பாடுகள் போன்ற செயற்பாடுகளால் ஈரநிலங்கள் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றன.

### ஈரநிலங்களை பாதுகாப்போம்

இயற்கையின் சமநிலையைப் பாதுகாப்பதற்கு ஈரநிலங்களைப் பாதுகாப்பது அவசியமாகும். ஈரநிலங்களைச் சரியான முறையில் பயன்படுத்துவதன் ஊடாக அவற்றைப் பாதுகாக்கமுடியும். இரசாயனப் பசளைகளைக் குறைவாகப் பயன்படுத்துதல், திட்டமிட்ட வகையில், நிர்மாணப்பணிகளை மேற்கொள்ளல், நீர்மூலங்களில் கழிவுகளைக் கொட்டுவதைத் தவிர்த்தல் போன்ற பல்வேறு செயற்பாடுகளினூடாக ஈரநிலங்களைப் பாதுகாக்க முடியும். அத்துடன் ஈரநிலங்களின் முக்கியத்துவம் பற்றி மக்களிடையே எடுத்துக்கூறி விழிப்புணர்வை ஏற்படுத்துதல், முருகைக்கல் அகழ்தல் மற்றும் கண்டல் தாவர அழிப்பு போன்றவற்றை தடைசெய்தல், பாடசாலை மட்டத்திலும் பல்கலைக்கழக மட்டத்திலும் ஈரநிலங்கள் தொடர்பான கருத்தரங்குகள், விவாதங்களை நடத்துதல், ஈரநிலங்களைப் பாதுகாப்பதற்கென அரசாங்கம் மானிய உதவிகளை வழங்குதல், கரையோர மணல் அகழ்வு நடவடிக்கைகளை தடை செய்தல் போன்ற பல்வேறுபட்ட நடவடிக்கைகளினாலும் ஈரநிலங்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களை குறைக்கலாம் அல்லது தவிர்க்கலாம்.

# 68.5%** அதிகம் பெறுங்கள்

12 மாதங்களுக்கு

**10.11%**

(ஆ.ச.வ.10.11%)

**6% (ஆ.ச.வ. 6%) வீத சராசரி சந்தை வட்டி வீதத்துடன் ஒப்பிடுகையில், CLC யில் ஒரு வருட நிலையான வைப்புக்கு (ஆ.ச.வ.10.11%) வட்டி கிடைக்கின்றது. அல்லது 68.5% வீதம் அதிக வட்டியாகும்.

| காலம் | பொது நிலையான வைப்புகள் | | | | சிரேஷ்ட பிரஜைகள் நிலையான வைப்புகள்* | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மாதாந்த | ஆ.ச.வ | முதிர்வில் | ஆ.ச.வ | மாதாந்த | ஆ.ச.வ | முதிர்வில் | ஆ.ச.வ |
| 01 மாதம் | - | - | 8.11% | 8.42% | - | - | 8.11% | 8.42% |
| 03 மாதம் | 8.06% | 8.36% | 8.36% | 8.63% | 8.06% | 8.36% | 8.36% | 8.63% |
| 06 மாதம் | 8.29% | 8.61% | 8.61% | 8.80% | 8.29% | 8.61% | 8.61% | 8.80% |
| 12 மாதம் | 9.67% | 10.11% | 10.11% | 10.11% | 10.13% | 10.61% | 10.61% | 10.61% |
| 13 மாதம் | 9.67% | 10.11% | 10.11% | 10.07% | 10.13% | 10.61% | 10.61% | 10.56% |
| 18 மாதம் | 9.67% | 10.11% | 10.11% | 9.87% | 10.13% | 10.61% | 10.61% | 10.35% |
| 24 மாதம் | 10.35% | 10.86% | 10.86% | 10.33% | 10.81% | 11.36% | 11.36% | 10.78% |
| 36 மாதம் | 10.81% | 11.36% | 11.36% | 10.27% | 11.26% | 11.86% | 11.86% | 10.68% |
| 48 மாதம் | 10.81% | 11.36% | 11.36% | 9.82% | 11.26% | 11.86% | 11.86% | 10.19% |
| 60 மாதம் | 11.71% | 12.36% | 12.36% | 10.10% | 12.16% | 12.86% | 12.86% | 10.44% |

- நிலையான வைப்புகளுக்கு கவர்ச்சிகரமான வட்டி
- ICRA லங்கா லிமிடட்டினால் (SL) A (Stable) தரம் பெற்ற நிறுவனம்
- நாடு முழுவதும் 75 கிளைகள்

கொமர்ஷல் லீசிங் என்ட் பினான்ஸ் பீஎல்சி, 2011 ஆம் ஆண்டின் 42ம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணய சபையின் உரிமம் பெற்றுள்ளது. ICRA லங்கா லிமிடட் இடமிருந்து (SL) A (Stable) தரம் பெற்றுள்ளது. இலங்கை மத்திய வங்கியின் நாணய சபையினால் செயல்படுத்தப்படும் இலங்கை வைப்புக் காப்புறுதி முறையின் கீழ் குறிப்பிட்ட வைப்புக் காப்புறுதி இடப்பட்டுள்ளதுடன் ஒரு வைப்பாளரிற்கு அதிகபட்சம் ரூ.1,100,000.00 வரையில் நட்டஈடு பெற்றுக் கொள்ள முடியும். பதிவு இலக்கம் PQ 131 PB PQ 22/04/1988 ஆம் திகதி ஸ்தாபிக்கப்பட்டது.

68, பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு 04
தொ: 0115 526 526 | www.clc.lk

CLC கொமர்ஷல் லீசிங் & பினான்ஸ்


# வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கு ஏற்ற தொழிற்கல்வியே தேவை

## பிரதமர் மஹிந்த தெரிவிப்பு

கொழும்பு, பெப். 2

வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்கு ஏற்றவகையில் தொழில்சார்ந்த தொழிற்கல்வி கற்கைநெறிகளை ஆரம்பிக்குமாறு தொழிற்பயிற்சி கற்கைநெறிகளை முன்னெடுக்கும் அரச நிறுவனங்களுக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ச ஆலோசனை வழங்கியுள்ளார்.

இளைஞர்களுக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்புகளை பெற்றுக்கொடுப்பது தொடர்பில் அலரி மாளிகையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

தொழில்முறை மட்டத்தில் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் பாடசாலையிலிருந்து விலகி, வெளிநாடு செல்லும் இளைஞர், யுவதிகளை அங்கு திறமையான தொழிலாளர்களாகப் பணிபுரிவதற்கு வழியேற்படுத்துவது தொடர்பிலும், திறமையிருந்தும் பயிற்சிச் சான்றிதழ் அற்றவர்களுக்கு குறுகியகால பயிற்சிமூலம் வெளிநாட்டு வேலைவாய்ப்பில் ஈடுபடுவதற்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்தல், வெளிநாட்டு வேலைவாய்ப்பு சந்தையையும், இந்நாட்டு இளம் சமூகத்தினரையும் இணைக்கக்கூடிய ஒரு முறைமையை உருவாக்குவது தொடர்பிலும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

கடந்த 26ஆம் திகதி வரை இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் அனுமதிபெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையங்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட வேலைவாய்ப்புகளில் ஜப்பான், தென்கொரியா, இத்தாலி, ருமேனியா, டோஹா, கட்டார் உள்ளிட்ட 22 நாடுகளில் ஒரு லட்சத்து 83 ஆயிரத்து 198 வேலைவாய்ப்புகளுக்கு பணியாளர்களை ஈடுபடுத்துவதற்கு தேவை உள்ளதாக இந்தக் கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டது. (வ-இ)

# இந்தியாவுடனான உறவை வலுப்படுத்த ஆலோசனை

கொழும்பு, பெப். 2

இலங்கை - இந்திய உறவை, பரிவர்த்தனைக் கட்டத்தில் இருந்து ஒரு மூலோபாயக் கட்டத்துக்கு நகர்த்துவதற்கான திட்டங்களை, அபிவிருத்தி செய்வது மிகவும் முக்கியம் என்று இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் மிலிந்த மொரகொட வலியுறுத்தியுள்ளார்.

விவேகானந்தா சர்வதேச அறக்கட்டளையால் ஏற்பாடு செய்யப்பட்ட மெய்நிகர் நிகழ்வில் அவர் இந்தக் கருத்துக்களைத் தெரிவித்தார். பெற்றோலியம், மின்சாரம், துறைமுகங்கள், சுற்றுலா, தகவல் தொழில்நுட்பம், ஏற்றுமதி, உற்பத்தி மற்றும் விவசாயம் ஆகிய துறைகளை மேம்படுத்த வேண்டும். இந்தியாவின் ஒட்டுமொத்த எரிசக்தி மூலோபாயத்துடன், திருகோணமலை எண்ணெய் தாங்கிப் பண்ணைகளையும், திருகோணமலைத் துறைமுகத்தையும் ஒருங்கிணைக்க வேண்டியது அவசியம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4-இ)

# சு.க. உறுப்பினர் மீதும் கூழ்முட்டைத் தாக்குதல்

கொழும்பு மாநகர சபையின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர் பிரதீப் ஜயவர்தன மீது மிளகாய்த்தூள் கலந்த கூழ் முட்டைத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

கொழும்பு மாநகர சபையின் சுற்றாடல் குழுவின் தலைவரை தெரிவு செய்வதற்கான வாக்கெடுப்பு சபை மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. வாக்கெடுப்பின் பின்னர் மிளகாய்த்தூள் கலந்த கூழ் முட்டையால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர் ஒருவரே தாக்கியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சுற்றாடல் மற்றும் காணிக் குழுவின் தலைவர் பதவிக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதீப் ஜயவர்தனவும் அதே கட்சியின் சமன் அபேகுணவர்தனவும் போட்டியிட்டனர். இதில் பிரதீப் ஜெயவர்த்தன வெற்றி பெற்றதையடுத்து இந்த தாக்குதல் இடம்பெற்றது. சம்பவம் தொடர்பாக மேயர் ரோசி சேனாநாயக்க விடமும், கறுவாத்தோட்ட பொலிஸிலும் பிரதீப் ஜயவர்தன முறைப்பாடு செய்துள்ளனர். (வ-இ)

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** பணியிடத்தில் உங்களின் உழைப்புக்கேற்ற ஊதிய உயர்வு கிடைக்கும். நல்ல விடயம் ஒன்றை துணிந்து செய்து வெற்றி காண்பீர்கள். சுபச்செலவுகள் வரும். பழைய முதலீடு லாபம் அளிக்கும்.

**இடபம்:** சற்றும் எதிர்பாராத நன்மை ஒன்று வருவதால் மகிழ்வீர்கள். குடும்பத்தினர் உங்களுக்கு ஆதரவாக இருப்பதால் நிம்மதி ஏற்படும்.

**மிதுனம்:** புதிய முடிவு எடுக்கும்போது இரு முறை யோசிக்கவும். யாரையும் வீணாகப் பகைத்துக் கொள்ளாதிருப்பது நல்லது. தொழில், பணியில் ஓரளவு முன்னேற்றம் உண்டாகும்.

**கடகம்:** பெரியவர்களுக்கு உதவி செய்து அவர்களின் ஆசியை பெறுவீர்கள். குடும்பத்தில் உள்ள இளம்வயதினரிடம் முன்னேற்றங்கள் ஏற்படும். நீண்ட நாளாக மனதில் இருந்து வந்த கவலை ஒன்று தீரும்.

**சிம்மம்:** வீட்டில் சுபநிகழ்வுகள் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் தொடங்கும். குடும்பத்தினர் பெருமை சேர்க்கும் வகையில் நடந்து கொள்வார்கள். எதிர்பார்த்த நன்மை கிடைக்கப்பெற்று மகிழ்ச்சி அடைவீர்கள்.

**கன்னி:** விரும்பிய பொருள்களை வாங்கி மகிழ்ச்சி அடைவீர்கள். நீங்கள் எதிர்பார்த்த தொகை ஒன்று [illegible] செலவுகளை குறைத்துக் கொள்வது நல்லது.

**துலாம்:** எதிர்பாராத நற்செய்தி ஒன்று வந்து மகிழ்ச்சியில் திக்குமுக்காட வைக்கும் குடும்பத்தினரால் சந்தோஷம் ஏற்படும். சேமிப்பு அதிகரிக்கும். பணவரவு கூடும். உறவினர்கள் மூலம் உதவி கிடைக்கும்.

**விருச்சிகம்:** நண்பர்களின் சந்திப்பு உங்களுக்கு பெரிதும் உதவும். பயம் நீங்கும். வெளி மனிதரால் ஏற்பட்டுவந்த பிரச்சினை ஒன்று நீங்கும். கோபத்தை கட்டுப்படுத்துவது நல்லது. பேச்சில் கவனம் தேவை.

**தனுசு:** பணியிடத்தில் இருந்து வந்த பிரச்சினை ஒன்று முடிவுக்கு வரும். நன்மை ஒன்று நிகழ்வதால் மனதில் [illegible] கூடும். மூத்தோரின் ஆரோக்கியத்தில் ஏற்பட்டிருந்த பாதிப்புகள் நீங்கும்.

**மகரம்:** கடந்த சில நாள்களாக இருந்து வந்த சிக்கல்கள் தீரும். கலைஞர்களுக்கு புதிய வாய்ப்பு வரும். குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படும் தேவையற்ற செலவுகளைக் குறைப்பது நல்லது.

**கும்பம்:** சகபணியாளர்கள் உங்களுக்கு நன்கு ஒத்துழைப்பு தருவார்கள். உற வினர்களிடம் இருந்து எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். நீண்ட நாள் பிரச்சினை ஒன்று முடிவுக்கு வரும்.

**மீனம்:** உடல் ஆரோக்கியத்தில் ஏற்பட்டிருந்த பாதிப்புகள் நீங்கும். கடந்த சில நாள்களாக இருந்த சிக்கல்கள் நீங்கும். தொழில் பற்றிய புதிய முயற்சியை நன்கு ஆராய்ந்து செய்யவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## சிவகணநாதன் திவாகரி

**(சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவி, உணவு விஞ்ஞானமும் தொழில்நுட்பவியலும் - 2 ஆம் வருடம்)**

**தோற்றம்** 16.12.1998 — **மறைவு** 31.01.2022



இணுவில் மேற்கு, செட்டிவளவு வீதியை பிறப்பிடமாகக் கொண்ட சிவகணநாதன் திவாகரி கடந்த (31.01.2022) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிவகணநாதன் மற்றும் அபரஞ்சி தம்பதியினரின் அன்பு மகளும், கஜப்பிரியாவின் ஆருயிர்ச் சகோதரியும், காலஞ்சென்றவரான கைலாயபிள்ளை - தங்கரத்தினம் மற்றும் காலஞ்சென்றவர்களான சுவாமிநாதன் - மனோன்மணி ஆகியோரின் பேர்த்தியும், அன்பரசி - ஸ்ரீரமணனின் அன்புப் பெறாமகளும், அழகிரி - நிர்மலாவின் பாசமிகு மருமகளும், சர்மிலன், சாம்பவி, கார்த்திகன் ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரியும், அபிநயா, அபிராம், அபிரன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.02.2022) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

செட்டிவளவு வீதி,
இணுவில் மேற்கு,
இணுவில்.

தகவல்:
குடும்பத்தினர்

(cs 17947) (2.6)

# அவசர மின்கொள்வனவு மோசடிக்கு வழிவகுக்கும்

## ஹர்ஷ டி சில்வா சுட்டிக்காட்டு



**கொழும்பு, பெப். 2**

**நாட்டுக்கு மின்சாரத்தை அவசரமாகக் கொள்வனவு செய்யும் பட்சத்தில் ஊழல் மோசடிகள் இடம்பெறலாம் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா சுட்டிக்காட்டியுள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டில் ஏற்பட்டுள்ள மின்சாரத் தட்டுப்பாடு குளறுபடிகளைக் காண்பித்து, அவசரமாக மின்சாரத்தைக் கொள்வனவு செய்ய இலங்கை மின்சாரசபை முயல்கின்றது. 84.5 ரூபாவுக்கு ஒரு அலகு மின்சாரத்தைக் கொள்வனவு செய்ய, இலங்கை மின்சாரசபை தயாராகி வருகின்றது என்று ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. அவசரமாக கொள்வனவுகளை மேற்கொள்ளும்போதே ஊழல்மோசடிகள் இடம்பெறுகின்றன. மேலும் அவசரமாக மின்சாரத்தைக் கொள்வனவு செய்ய வேண்டுமென்று அழுத்தம் கொடுப்பவர் யார்? கண்துடைப்புக்காக அமைச்சரவை இதற்கு அனுமதி வழங்கியுள்ளதா? இவை அனைத்தும் நாடகமே - என்றார். (ம-4-இ)



யாழ்ப்பாணம் வருகை தந்துள்ள ஐ.நாவின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ஹானா சிங்கர் யாழ். மாவட்டச் செயலர் க.மகேசனை நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடினார். (ம-23)

## மருத்துவ உபகரணங்கள் இலங்கைக்கு நன்கொடை

கொழும்பு, பெப்.2

சவூதி அரேபியாவிலுள்ள இலங்கைத் தூதரகத்தால், இலங்கையிலுள்ள மருத்துவமனைகளுக்கு 1.2 மில்லியன் ரூபா பெறுமதியான மருத்துவ உபகரணங்கள் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளன. சவூதி அரேபியாவில் வசிக்கும் இலங்கைச் சமூகத்தினருடன் இணைந்து இலங்கை கலாசார மன்றம் இவற்றை வழங்கியது. (வ-இ)



## கட்டாரில் உயிரிழந்தவர் இலங்கையர் அல்லர்

கட்டாரின் டோகாவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த நபர் இலங்கையர் அல்லர் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் இதனைத் தெரிவித்துள்ளது.

அந்தப் பகுதியில் உள்ள மருத்துவமனைகளைப் பரிசோதித்த போது துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த இலங்கை பிரஜை தொடர்பான தகவல்கள் எவையும் இல்லை என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என பணியகம் மேலும் தெரிவித்துள்ளது. (வ-இ)

## எரிபொருள்களை விடுவிக்க இந்திய நிறுவனம் உடன்பாடு

40 ஆயிரம் மெற்றிக்தொன் டீசலை விநியோகிப்பதற்கு, இந்தியன் ஒயில் கம்பனி உடன்பாடு தெரிவித்துள்ளது. இந்தியன் ஒயில் கம்பனியிடமிருந்து 40 ஆயிரம் மெற்றிக்தொன் டீசல் மற்றும் 40 ஆயிரம் மெற்றிக்தொன் பெற்றோலைக் கொள்வனவு செய்வது தொடர்பாக எரிசக்தி அமைச்சு கலந்துரையாடலை நடத்தியது. அதற்கமைய, அவற்றைக் கொள்வனவு செய்வதற்காக, எரிசக்தி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு, அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ம-4-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் வங்கி ஊடாக வெளிநாட்டிலிருந்து பணம் அனுப்பி வெற்றியாளர் ஆகுங்கள்




இறுதிச் சீட்டிழுப்பின் வெற்றியாளருக்கு

## ரூ.10,000,000/-

மாதாந்த வெற்றியாளர்களுக்கு ரூ.1,000,000/- × 11 மாதங்கள்

**ரூ.11,000,000/-**

**வாராந்த வெற்றியாளர்களுக்கு தங்கப் பவுண்**

**நாளாந்த வெற்றியாளர்களுக்கு ரூ.10,000/-**

**மேலும் மேலும் பணம் அனுப்பி, வெல்லும் வாய்ப்புக்களை அதிகரித்துக் கொள்ளுங்கள்**

செல்லுபடியாகும் காலம் 2022 பெப்ரவரி 01 தொடக்கம் டிசெம்பர் 31 வரை மட்டுமே.

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது

www.peoplesbank.lk

1961 PEOPLE'S BANK CALL CENTRE

PEOPLE'S BANK

Pride of the Nation

AA- (lka) Fitch Rating, AAA- Brand Finance Rating

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## ஜெகசோதிமலர் சடாட்சரம்



யாழ் . உரும்பிராயைப் பிறப்பிடமாகவும், நீர்வேலியை வசிப்பிடமாகவும் பிரான்ஸ் Neuilly -sur - Marne ஐ தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட ஜெகசோதிமலர் சடாட்சரம் அவர்கள் கடந்த (21.01.2022) வெள்ளிக்கிழமை பிரான்ஸில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா - பாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இராசதுரை - பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இராசதுரை சடாட்சரம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சற்குணசோதிமலர் மற்றும் அற்புதசோதிமலர் ஆகியோரின் அன்புச் சகோதரியும், இந்துராணி (பிரான்ஸ்), கலாலோஜினி (கனடா), புவிச்சந்திரன் (உரிமையாளர் - வினோ நகைப் பூங்கா - யாழ்ப்பாணம்), புலேந்திரன் (Jeyam Multi Express - சுவிஸ்), சதீஸ்வரன் (பிரதிப்பணிப்பாளர் - விவசாயத்திணைக் களம் - கிளிநொச்சி), பிரதாபன் (Franprix- பிரான்ஸ்), காலஞ்சென்ற தனிஸ்வரன், மகிந்தன் (வினோ நகைப் பூங்கா - யாழ்ப்பாணம்), கவிதாலோஜினி (ஜேர்மனி), நிகிர்தாலோஜினி (கனடா), நிர்மலாலோஜினி (பிரான்ஸ்), மதனரூபன் (Paris Corner / Sadasothy Private Ltd - லண்டன்), ஜசிந்தாலோஜினி (கண்டி) ஆகியோரின் அருமைத் தாயாரும், நித்தியானந்தன், சரவணபவன், வித்தியா, ஜெயகௌரி, சுகன்யா, துஷியந்தினி, தயானந்தி, சுதாகரன், ஜோதிமுருகன், ஸ்ரீகந்தராசா, சுஜிதா, இந்திக ஆகியோரின் அன்பு மாமியாரும், சுஜேன், அனிந்திகா, வினோத், பிரியங்கா, பிரியன், சன்ஜித், சுவஸ்திகா, பிருதுவி, பிரவின்ஜா, பர்விஜன், பிறினவ்ஜா, இந்துஜா, அதிகன், மாலதி, விதுஷிகா, விதுரன், சத்விகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.02.2022) பிரான்ஸ் நேரப்படி 9.00 மணிக்கு நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
ச.புவிச்சந்திரன் - 077 381 6850
ச.சதீஸ்வரன் - 077 603 4656
ச.மகிந்தன் - 077 603 4331

தகவல்:
குடும்பத்தினர்
21/1, கருவப்புலம் வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

# நிலக்கடலை பதனிடும் நிலையம் கரைதுறைப்பற்றில் திறந்துவைப்பு!



முல்லைத்தீவு, பெப். 2

கரைதுறைப்பற்று நிலக்கடலை உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தில், நிலக்கடலை பதனிடும் உற்பத்தி நிலையம் அண்மையில் திறந்துவைக்கப்பட்டது.

வடமாகாண கூட்டுறவு ஆணையாளர் மு.நந்தகோபாலன் தலைமையில் இடம்பெற்ற இந்தத் திறப்பு விழாவில், வடக்கு பிரதம செயலாளர் சமன் பந்துலசேன பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு திறந்து வைத்தார்.

இந்தப் பதனிடும் நிலையம் ஐ.எல்.ஓ. நிறுவனத்தின் நிதிப் பங்களிப்பில் கூட்டுறவுத்துறையும் தனியார் நிறுவனமும் இணைந்த வேலைத்திட்டம் ஆகும். ஐ.எல்.ஓ. நிறுவனம் கூட்டுறவு திணைக்களத்தின் ஊடாக 15.6 மில்லியன் ரூபா நிதி கட்டடத் தொகுதிக்காகவும், தனியார் நிறுவனமான 'டேவிட்கிராம்' நிறுவனத்தின் மூலம் 14 மில்லியன் ரூபா இயந்திரப் பங்களிப்புக்காகவும் வழங்கப்பட்டுள்ளது.

நிகழ்வில் கருத்துத் தெரிவித்த பிரதம செயலாளர் சமன் பந்துலசேன தெரிவிக்கையில்:-

முல்லைத்தீவு விவசாயிகளுக்கு இந்தத் திட்டம் அற்புதமான ஒரு வாய்ப்பாக அமைந்துள்ளது. உற்பத்தியாளர்களின் அறுவடை நடைபெறும் இடத்திலேயே டேவிட்கிராம் நிறுவனம் உற்பத்திகளை கொள்வனவு செய்யும் என்பதால் சந்தை வாய்ப்பு மிகமிக இலகுவாக ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. இத்தகைய வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த பெருமை கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்துக்கும் [illegible] றவு அபிவிருத்தி [illegible] உரித்தானது - என்றார். (ம)

# கண்ணீர் காணிக்கை

தோற்றம்
30 . 07 . 1944



மறைவு
21 . 01 . 2022

அமரர் திருமதி

## ஜெகசோதிமலர் சடாட்சரம்

வினோ நகைப்பூங்கா
உரிமையாளரின் தாயார் பிரான்சில் காலமானார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.02.2022)
பிரான்சில் நடைபெறும்

பாதிவழி உன் பயணம் பரிதவிக்கும் எங்கள் மனம்
மீதிவழி நலம் தொடர யாருமுண்டோ எங்களிடம்
பாசம் எனும் பெருங்கடலில் பெற்ற பிள்ளை விழிநீர் சிந்த
பதறுகின்ற உறவுகளை பாதியிலே விட்டுப்போனதெங்கே!

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருற்றிருக்கும்
வினோ நகைப் பூங்கா ஊழியர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளம் ஊடகவியலாளர் திடீரென உயிரிழப்பு



யாளராக பணியாற்றிய தில்காந்தி பல திறமைகளைக் கொண்டவராவார். (ஏ-இ)

யாழ்ப்பாணம், பெப்.2

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடக கற்கை நெறியின் தற்காலிக உதவி விரிவுரையாளராக பணியாற்றிய இளம் ஊடகவியலாளரான தில்காந்தி நவரட்ணம் நேற்று உயிரிழந்துள்ளார்.

நேற்று அதிகாலை 5 மணியளவில் சுகவீனம் காரணமாக மொனராகலை சிறுகல மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட தில்காந்தி, சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.

மொனராகலை மரக்கலையை சேர்ந்த தில்காந்தி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஊடக கற்கை நெறியை மேற்கொண்டார். பின்னர், அதே பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக பணியாற்றினார். 6 மாதங்களுக்கு முன்னர் அவருக்கு இருதய சத்திர சிகிச்சை ஒன்று மேற்கொள்ளப்பட்டது. ஊவா மாகாணத்தின் பின்தங்கிய பிரதேசம் ஒன்றில் இருந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் விரிவுரை

---

# அநுர மீது முட்டை வீச்சு: பின்னணியில் அரசியல்

## ஜே.வி.பி. கண்டனம்



கொழும்பு, பெப். 2

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவை இலக்கு வைத்து, முட்டை வீசப்பட்ட சம்பவத்தின் பின்னணியில் அரசியல் தலையீடு உள்ளது என்று கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவிக்கையில்;

முட்டைகளை வீசுவதற்கு, நபரொருவருக்கு பணம் கொடுத்தமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, சம்பவம் இடம்பெற்றவுடன் பொலிஸ்மா அதிபருக்குக் கடிதம் அனுப்பியதன் மூலம், தாக்குதலின் பின்னணியில் உள்ளவர்கள் யார் என்பது தெளிவாகின்றது. சம்பவத்தின் பின்னணியில் அரசியல் தலையீடு இருப்பதை எந்தவொரு தனிநபரும் மறைக்க முடியாது.

எமது பயணத்தைத் தடுக்க சட்டவிரோத குழுக்களைப் பயன்படுத்த முடியாது.

இதுபோன்ற முயற்சிகளில் ஈடுபடுவது பொதுமக்களிடையே மேலும் அதிருப்தியை ஏற்படுத்தும். இந்தச் சம்பவம் திட்டமிடப்பட்டது. தற்செயல் நிகழ்வு அல்ல -என்றார். (ம-4-இ)

---

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 30.07.1944 | மறைவு 21.01.2022

வினோ நகைப் பூங்கா உரிமையாளரின் அன்புத் தாயார்

அமரர்

**திருமதி சடாட்சரம் ஜெகசோதிமலர்**

அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஸ்ரீமீனாட்சி நகை அகம்**
உரிமையாளரும்,
ஊழியர்களும்.

---

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 23 . 01 . 1958 | மறைவு 29 . 01 . 2017

**பவளநாதன் கௌரி மனோகரி**

அம்மா உன்னை இழந்து
ஆண்டுகளின் அதிகரிப்பதில்
இன்றோடு கடந்து விட்ட
ஐந்து வருடங்கள்...

இன்றும் என்றும் உம் பிரிவை
ஏற்க மறுக்கும் எம் மனது
உம் கரம் பிடித்து உம் அடி
தொடர்ந்த எம்மை நட்டாற்றில்
விட்டது ஏனோ?

ஐவிரண்டு திங்கள்
எமைச்சுமந்து அனுதினம்
எமக்காய் நீர் பட்ட பாடு
அறிவோம் அம்மா
பார்போற்ற இத்தரணியில்
எம்மை தந்த நீர் இன்று – எம்
நன்நிலை பார்த்து அகம் மகிழ
நீர் இங்கு இல்லை..

என்றும் உம் நினைவால் வாடும் உம்
குடும்பத்தினர்.

---

## 80ஆவது பிறந்ததின நினைவுகளுடன் 15ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம் : 08. 02. 1942 | மறைவு: 02. 02. 2007



அமரர்

**சூசைப்பிள்ளை வேதநாயகம்**

"உயிர்ப்பும் உயிரும் நானே
என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பிலும் வாழ்வான்"


அப்பா! பதினைந்து ஆண்டுகள் நகர்ந்தாலும்
நம்மை விட்டு அகலாது
உங்களின் பசுமையான நினைவுகள்
அன்பினால் எம்மை அரவணைத்து
பாசத்தால் எம்மை தாங்கி நல் வழியில்
நடத்தி வழிகாட்டிய எங்கள் அன்பு
அப்பாவே!

என்றும் உங்கள் நீங்காத நினைவுகளுடன்...

மகன்மார்கள்
வே. ரவீந்திரகுமார் [ரவி]
வே. சுரேந்திரகுமார் [சுரேஸ்]

---

## இதய அஞ்சலி



தோற்றம் 03.08.1945 | மறைவு 01.02.2022

எமது வீரமாகாளியம்மன் கோவில் தொண்டர் **ஜனாகரன் (CK)** அவர்களின் அன்புத் தந்தையார்

**சபாலிங்கம் விஜயரத்தினம்**

அவர்களின் மறைவையிட்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு, குடும்பத்தினருக்கு, எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

தொண்டர்கள்
வீரமாகாளியம்மன் கோவில்

(CS 18337) 1.6

---

## நண்பர்களின் இதய அஞ்சலி



தோற்றம் 03.08.1945 | மறைவு 01.02.2022

அகவை 77இல் அமரத்துவமடைந்த எமது அன்பு நண்பன் **ஜனாகரன் (CK)** அவர்களின் அன்புத் தந்தையார்

**சபாலிங்கம் விஜயரத்தினம்**

அவர்களின் மறைவையிட்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு, குடும்பத்தினருக்கு, எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

நண்பர்கள்
வீரமாகாளியம்மன் கோவில்

(CS 18337-A) 1.6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## முட்டை வீசப்பட்டதற்கும் எனக்கும் தொடர்பில்லை

பிரசன்ன மறுப்பு

கொழும்பு, பெப். 2
மக்கள் விடுதலை முன்னணியால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மாநாட்டில், முட்டை வீசப்பட்ட சம்பவத்துக்கும், எனக்கும் எந்தத் தொடர்புமில்லை என்று சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பக்கச்சார்பற்ற விசாரணைகளை நடத்தி, அதற்குக் காரணமானவர்களை பதவிநிலைகளைப் பாராமல் தண்டிக்குமாறு, ஜனாதிபதி மற்றும் பொலிஸ் மா அதிபர் ஆகியோரிடம் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (ம-4-இ)

## நீரில் மூழ்கி ஐவர் சாவு! ஒருவருக்குக் கொரோனா

கொழும்பு, பெப். 2
உமாஓயா ஆற்றில் நீராடச்சென்று, நீரில் மூழ்கி உயிரிழந்த ஐவரில் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதனையடுத்து அவருடன் தொடர்புடைய 16 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். கடந்த சனிக்கிழமை 11 பேர் உமா ஓயா ஆற்றில் நீராடிக்கொண்டிருந்தபோது 6 பேர் நீரில் மூழ்கினர். அவர்களில் ஐவர் உயிரிழந்தனர்.

இந்த ஆற்றின் ஒரு பகுதி நீராடுவதற்குத் தடை செய்யப்பட்டது. கடந்த 4 வருடங்களுக்கு முன்னரும் இருவர் இதேபோன்று நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ம-4-இ)

## மாடியிலிருந்து வீழ்ந்த சிறுவனுக்கு கொரோனா

கொழும்பு, பெப். 2
பம்பலப்பிட்டியில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பிலிருந்து, தவறிவிழுந்த 15 வயதுச் சிறுவனுக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை ஏழு மாடிக் கட்டடத்தில் இருந்து 15 வயதுடைய சிறுவன் தவறி வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

இதனையடுத்து மேற்கொள்ளப்பட்ட உடற்கூற்றுப் பரிசோதனையில் சிறுவன் ஐஸ் போதைப்பொருள் பயன்படுத்தியிருப்பதும் தெரியவந்துள்ளது. அத்துடன் கொரோனாத் தொற்றும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கட்டடத்தில் உள்ள சி.சி.ரி.வி. காட்சிகளைக் கொண்டு இறப்புத் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-4-இ)


## யாழ்ப்பாணம் மாநகர சபையின் சட்ட ஆலோசகர் பதவிக்கான விண்ணப்பம் கோரல் - முழுநேர ஒப்பந்த அடிப்படையிலானது

யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு சட்ட ஆலோசனைகளை வழங்குவதற்காகவும் சபை மற்றும் நிர்வாக நடவடிக்கைகளைப் பலப்படுத்துவதற்காகவும் யாழ்ப்பாணம் மாநகர சபையின் சட்ட ஆலோசகர் பதவி ஒன்றிற்காக தகைமை உடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**சேவை நிபந்தனைகள்**

1. முழுநேரமாக மாநகர சபையில் கடமையாற்ற வேண்டும்
2. இந் நியமனமானது ஒரு வருட காலத்திற்கானது என்பதுடன் மாநகர சபையின் தேவையின் அடிப்படையில் இவ் ஆலோசனை சேவை நீடிக்கப்படலாம்.
3. நியமிக்கப்படுபவர் சபை சார்பான நீதிமன்ற வழக்குகள் தொடர்பிலும் சபைக்கு எதிராக தாக்கல் செய்யப்படும் வழக்குகள் தொடர்பிலும் தமது ஆலோசனைகளை வழங்குவதுடன் மாநகர சபையின் சார்பில் நீதிமன்றுகளில் முன்னிலையாதல் வேண்டும்.
4. மாநகர சபை சார்பான உடன்படிக்கைகள், உறுதிகளை அத்தாட்சிப்படுத்தல் வேண்டும்.
5. இந்த ஆலோசனை சேவையானது ஒரு மாதகால எழுத்து மூல முன்னறிவித்தலினை இரு பகுதியினரில் ஒரு பகுதியினர் மற்றவருக்கு வழங்குவதன் மூலம் நிறுத்தப்படவோ, மாற்றங்கள் செய்யப்படவோ கூடியதாகும்.

**அடிப்படைத் தகைமைகள்**

1. விண்ணப்பதாரி உயர் நீதிமன்ற சட்டத்தரணியாகவும் நொத்தாரிசாகவும் சத்தியப்பிரமாணம் செய்தவராக இருத்தல் வேண்டும்.
2. 45 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
3. உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பான சட்ட ஏற்பாடுகளில் தெளிவும் முன்னனுபவமும் உள்ளவராக இருத்தல் விரும்பத்தக்கது.

**கொடுப்பனவு விபரம்**

1. மாதாந்த கொடுப்பனவு ரூபா 125,000 ஆகும்.
2. ஊழியர் சேமலாப நிதியத்திற்காக மாதாந்த கொடுப்பனவின் எட்டு வீதமான (8%) தொகை மாதாந்தக் கொடுப்பனவிலிருந்து கழிக்கப்படும்.
3. மாதாந்த கொடுப்பனவின் பன்னிரண்டு வீதமான (12%) தொகை ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் மூன்று வீதமான (3%) தொகை ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் சபை நிதியிலிருந்து செலுத்தப்படும்.

**தெரிவு செய்யப்படும் முறை**

கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் அடிப்படையில் மாநகர சபையால் நியமிக்கப்படும் தேர்வுக் குழுவின் மூலம் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்

**விண்ணப்பிக்கும் முறை**

விண்ணப்பதாரியின் சுயவிபரங்களுடன் தகைமைகளிற்கு ஆதாரமான சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் நேரடியாக அல்லது பதிவுத்தபால் மூலம் **"ஆணையாளர், மாநகர சபை யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கு விண்ணப்ப முடிவுத்திகதியன்று அல்லது அதற்கு முன்பாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

**விண்ணப்ப முடிவுத்திகதி 15.02.2022**

**ஆணையாளர்**
**மாநகர சபை, யாழ்ப்பாணம்**
**01.02.2022**

(cr.37492) (2.6)



சிவமயம்



# இணுவில் திருவருள்மிகு ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் ஆலய

## புனராவர்த்தன அஷ்டபந்தன நிகமொக்த நவகுண்டபக்ஷ மஹாயாக கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

## திருமுழுக்குத் திருமுகம் - 06.02.2022

**இன்று (02.02.2022) புதன்கிழமை தொடக்கம் (05.02.2022) ஞாயிற்றுக்கிழமை வரை காலை 08.00 மணிக்கும் மாலை 4.00 மணிக்கும் யாகபூஜை இடம்பெறும்.**

**எண்ணெய்காப்பு: 03.02.2022 வியாழன் பகல் 12.00 மணிமுதல் 04.02.2022 வெள்ளிக்கிழமை இரவு 10.00 மணிவரை.**

**06.02.2022 காலை 8 மணிக்கு மேல் 8.45 இற்குள் வரும் கும்பலக்கினத்தில் ஸ்தூபிகள் கும்பாபிஷேகம் தொடர்ந்து பிரதான கும்பங்கள் வீதி பிரதட்சிணம் 8-47 இற்கு மேல் 10.26 மணிக்குள் வரும் மீனலக்கின சுப முகூர்த்தத்தில் மஹா கும்பாபிஷேகம்.**

விநாயகர் அடியார்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞன் படுகொலை

## சந்தேகநபர் தலைமறைவு

இருவருக்கு இடையில் ஏற்பட்ட தகராற்றில், கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு இளைஞர் ஒருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் மாலபே, கெக்கிரிஹேன, தலங்கமப் பிரதேசத்தில் நடந்துள்ளது. உயிரிழந்தவர் அதே பகுதியைச் சேர்ந்த 19 வயதுடைய இளைஞர் என்று அடையாளம் காணப்பட்டுள்ளார். கொலைக்கான காரணம் இதுவரை வெளியாகவில்லை. சந்தேகநபர் குறித்த பிரதேசத்தை விட்டுத் தப்பிச் சென்றுள்ளார் எனத் தெரிவித்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-4-இ)


**வீட்டுப் பணிப்பெண் தேவை**

தங்கி நிற்பவர்கள் விரும்பத்தக்கது.

தொ.இல: **074 1100 639**

**வேலையாள் தேவை**

கடை ஒன்றிற்கு பெண் வேலையாள் தேவை.

- சம்பளம் - 20,000.00
- மதிய உணவு

**077 937 0000, 075 498 5400**

**வேலையாட்கள் தேவை**

யாழ். போதனா வைத்தியசாலையின் கீழ் இயங்கிவரும் "ராக்கெற்" சுத்திகரிப்பு தனியார் நிறுவனத்திற்கு வேலையாட்கள் உடன் தேவை.

தொடர்புக்கு:

**077 850 7213**
**076 9440 154**

(CS 18325) 1-6

**மாபிள் வேலை**

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்து தரப்படும். ஒரு சதுர அடி - 50 ரூபா இழுத்து பதிக்க - 65 ரூபா

**077 334 1281**


## பெயர் மாற்றம்

யாழ். மாவட்டம் மிருசுவில் வடக்கைச் சேர்ந்த 1962.10.22ஆம் திகதி பிறந்த எனது பிறப்பு அத்தாட்சிபத்திரத்தில் வைரமுத்து செல்வபதி செந்தாமரை என பதியப்பட்டுள்ளது. இப் பெயரில் இருந்து செந்தாமரை எனும் பெயரை நீக்கி செல்வபதி என்று மாற்றியுள்ளேன் என்பதனையும் இனிவரும் காலங்களில் அனைத்து ஆவணங்களிலும் செல்வபதி என்றே கையொப்பம் இடுவேன் என்று இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

வை. செல்வபதி

## மரண அறிவித்தல்

தோற்றம் 03 . 08 . 1945



மறைவு 01 . 02 . 2022

### சபாலிங்கம் விஜயரத்தினம் (செல்வமகன்)

மண்டைதீவு 6ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சபாலிங்கம் விஜயரத்தினம் (செல்வமகன்) நேற்று (01.02.2022) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் சிவஞானதேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சபாலிங்கம் வாலாம்பிகை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மாணிக்கம்-அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், கவிந்திரன், வினோஜா, ஜனாகரன், யசிந்தன், அகீபன் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், ராதிகா, பவித்ரா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், கோபினா, தக்ஷாவின் அன்புப் பேரனும், விநாயகமூர்த்தி (சின்னக்கிளி), கேதீஸ்வரன், காலஞ்சென்ற ராஜேஸ்வரி, யது, யதுகுலமணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், இரத்தினானந்ததேவி, சந்திரவதனா, காலஞ்சென்ற ரவீந்திரன், நளாயினி, சௌந்தர்ராஜன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.02.2022) புதன் கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகளுக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சைவப் பாடசாலை வீதி,
கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.

தகவல்: குடும்பத்தினர்
077 707 1017

(CS 18329) 1-6

## மரண அறிவித்தல்

பிறப்பு 09 . 05 . 1951



இறப்பு 01 . 02 . 2022

### திருமதி புவனேஸ்வரி சண்முகலிங்கம்

மானிப்பாய் மூத்ததம்பி ஒழுங்கையை பிறப்பிடமாகவும் 78/2 கெரவலபிட்டிய ரோட் ஹெந்தளை வத்தளையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி. புவனேஸ்வரி 01.02.2022 அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான சிங்கராசா செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும், திரு. சண்முகலிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ் சென்றவர்களான நாகலிங்கம் -நல்லம்மா தம்பதிகளின் மருமகளும் கஜேந்திரன் (Canada) சுஜேந்திரன் (Swiss) கரீந்திரன் (London) வாசுகி (கொழும்பு) ஜானகி (Canada) ஆகியோரின் அன்புத்தாயாரும் ரஜீவ், கஜேந்திரன், வினோ, தாக்ஷாயினி, தனுஷா ஆகியோரின் அன்பு மாமியாரும், சாயினி, றிஷானி, திஷா, லைஷா, நிஷாரா, சாகித்தியன், ஆதி, யாழினி, கவினேஷ், கனிஷ்ரன், ஷஸ்வின், மகிஷா, அபிநயா, ஹரிஹர சுதன் ஆகியோரின் அன்புப் பேத்தியும், கனகராசா, மகேஸ்வரி, சௌந்தரராஜன் ஆகியோரின் அன்பு சகோதரியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 02-02-2022 புதன்கிழமை காலை 9மணி முதல் வத்தளை மகிந்தமலர்ச்சாலையில் பார்வைக்காக வைக்கப்பட்டு மறுநாள் 03-02-2022 வியாழக்கிழமையும் காலை 9.00 மணி முதல் பார்வைக்காக வைக்கப்பட்டு மாலை 4.00 மணிக்கு கெரவலப்பிட்டிய பொது மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் - குடும்பத்தினர்
கணவர் 0777521316, மருமகன் ரஜீவ் 0772927170

## மரண அறிவித்தல்

பிறப்பு 15 . 03 . 1925



இறப்பு 28 . 01 . 2022

### திரு.குழந்தைவேலு கந்தையா

**(ஓய்வுபெற்ற ஆசிரியர் - வீமன்காமம் மகாவித்தியாலயம், மாவிட்டபுரம், Srilanka)**

யாழ். மாவிட்டபுரத்தை பிறப்பிடமாகவும் கொழும்பு, Dubai ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட குழந்தைவேலு கந்தையா அவர்கள் கடந்த (28.01.2022) வெள்ளிக்கிழமை அன்று Dubai இல் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குழந்தைவேலு செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நடராஜா கௌரியம்மா தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற தையல்நாயகி அவர்களின் அன்புக் கணவரும், சந்திரசேகரன், ரஞ்சனி (கனடா), காஞ்சனா (கனடா), அரவிந்தன் (Dubai) ஆகியோரின் அன்புத் தந்தையும், கலாஈஸ்வரன் (கனடா) பாலமுரளி (கனடா) தர்மினி (Dubai) ஆகியோரின் அன்பு மாமனாரும், தனுஷன், அருண், துளசி, காருண்யா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.02.2022) வியாழக்கிழமை Dubai இல் நடைபெறவுள்ளது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.


**அரவிந்தன் - மகன் - 044 208 059**
**ரஞ்சனி - மகள் - 647 864 7772**
**காஞ்சனா - மகள் - 416 218 9024**

[illegible]

(CS 183[illegible])

## மரண அறிவித்தல்

பிறப்பு 22 . 07 . 1936



இறப்பு 30 . 01 . 2022

### வல்லிபுரம் பொன்னுச்சாமி

யாழ். தையிட்டியைப் பிறப்பிடமாகவும், யாழ். தட்டாதெரு, கனடா Scarborough ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட வல்லிபுரம் பொன்னுச்சாமி அவர்கள் கடந்த (30.01.2022) ஞாயிற்றுக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் செல்லம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வரும், காலஞ்சென்றவர்களான செல்லப்பா வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், கண்மணி அவர்களின் ஆருயிர்க் கணவரும், றுபேந்தி, பிரகலாதன், பிரதாபன் ஆகியோரின் அன்புத் தந்தையும், லோகேந்திரன், நாராயணி, இளங்கோதை ஆகியோரின் அன்பு மாமனாரும்,தர்ஷன், கிரோஷன், தாரிணி, சகானா, வைஷ்ணவி, அஜெய்னன், அஜானன் ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான சிங்கராஜா, தர்மராஜா, சிவகுருநாதன் மற்றும் அரியமலர், செல்வமலர், அருளாநந்தசிவம், புஸ்பமலர் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான ராசம்மா, பொன்னுத்துரை, சின்னம்மா, தியாகராஜா, அழகரட்ணம் மற்றும் அன்னம்மா, செல்வராசா, ராஜரட்ணம், மனோன்மணி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் புகழுடல் நாளை (03.02.2022) வியாழக்கிழமை 9.30 AM முதல் 11.00 AM வரை Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada என்ற முகவரியில் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டு அன்றையதினம் 1:30 PM அளவில் Highland Hills Crematorium 12492 Woodbine Avenue, Gormley, Ontario, L0H 1G0, Canada இல் தகனக்கிரியைகள் இடம்பெறும்.

தொடர்புகளுக்கு
[illegible] - மகள் -Mobile : +16473343837
பிரகலாதன் - மகன் -Mobile : +16478954119
பிரதாபன் - மகன் -Mobile : +14168754119

தகவல்:
குடும்பத்தினர்

(CS 18333) 1/6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டுறவுப் பயிற்சிக்கல்லூரி
## கணினிப் பயிற்சிநெறிக்கான விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியில் நடாத்தப்படவுள்ள கணினிப் பயிற்சிநெறிக்கு விண்ணப்பம் கோரப்படுகின்றது

| இல. | பயிற்சி விபரம் | பயிற்சி காலம் | அடிப்படை கல்வித்தகைமை |
|---|---|---|---|
| 02 | கணினிப்பயிற்சி நெறி **MS Office** | 03 மாதம் | க.பொ.த.சாதாரண தரம் |

மேற்படி பயிற்சிக்கான விபரங்களையும் விண்ணப்பபடிவத்தையும் சபையின் அலுவலக நேரத்தில் பெற்று விண்ணப்பிக்கவும்

- **விண்ணப்ப முடிவுத் திகதி :- 19.02.2022**
- **விண்ணப்பிக்க வேண்டிய முகவரி :**

**செயலாளர்,**
**யாழ்ப்பாணம் மாவட்டம் கூட்டுறவுச் சபை,**
**இல.12,கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.**

(cr.37479) (2.6)

## அச்சிடல் பெறுகைக்கான அழைப்பு - 2022
## வலயக் கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்.
### NP/41/20/1/3/Proc/2022/02

01. யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகத்தின் 2022 ஆம் ஆண்டுக்கான கீழ்வரும் விபரப்படியான அச்சிடலினை மேற்கொள்வதற்கு பிராந்திய பெறுகைக்குழு முத்திரையிடப்பட்ட பெறுகைகளினைக் கோருகின்றது.

| பெறுகை இலக்கம் | பெறுகை தலைப்பு |
|---|---|
| NP/41/20/1/3/Proc/2022/02 | பரீட்சை வினாத்தாள் அச்சிடல் |

02. பெறுகைகள் அனைத்தும் தேசிய போட்டி விலைக்கேள்வி அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்படும்.
03. தகுதியான கேள்விதாரர், தற்பொழுதும் செல்லுபடியாகவுள்ள வடக்கு மாகாணத்திற்குட்பட்ட அச்சிடலுக்கான வியாபாரச் சான்றிதழுடன், கறுப்புப் பட்டியலில் தமது பெயர் உட்படாதவராக இருத்தல் வேண்டும். அத்துடன் கேள்விதாரர் யாழ்ப்பாண மாவட்டத்தில் தொழில் நிறுவனத்தினை/ கிளையினைக் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.
04. விண்ணப்பதாரர் பெறுகை உள்ளடக்கம் பகுதி II இல் கூறப்பட்ட தகைமைகளினை நிறைவுசெய்திருத்தல் வேண்டும்.
05. வழங்குனர்கள் அலுவலகத்தில் கிடைக்கும் கேள்வி ஆவணத்திற்கான விண்ணப்படிவத்தினை பூர்த்திசெய்து மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணமாக ரூபா 1000/= வினை அலுவலக நாட்களில் 02.02.2022 தொடக்கம் 18.02.2022 ம் திகதி வரையான காலப்பகுதியில் 09.00 மணி தொடக்கம் 15.00 மணிவரை அலுவலகத்தில் செலுத்தி கேள்விப் படிவங்களை பெற்றுக்கொள்ளலாம்.
06. இது தொடர்பான பெறுகை முன்னறிவிப்பு கூட்டம் (Pre bid meeting) 15.02.2022 ம் திகதி 10. மணிக்கு வலயக் கல்விப் பணிப்பாளரின் மாநாட்டு அறையில் இடம்பெறும்.
07. மேலதிக விபரங்களினை அலுவலக நேரங்களில் கணக்காளர். வலயக் கல்வி அலுவலகம். யாழ்ப்பாணம் 021-2222647 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.
08. விலைக் கேள்விகள் 21.02.2022 ம் திகதி 15.00 மணிக்கு முன்பதாக வலயக் கல்வி அலுவலக கணக்காளர் அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். சமர்ப்பிக்கப்பட்ட விலைக் கேள்விகள் விலைக் கேள்வியாளர்கள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும்.
09. கூறுவிலை சமர்ப்பித்தல் திகதியில் நாட்டில் ஏற்படும் அசாதாரண சூழ்நிலையால் அரசாங்க அறிவித்தலின் பிரகாரம் அலுவலகம் மூடப்பட்டிருப்பின் அடுத்துவரும் அலுவலக நாளில் குறித்த நேரத்தில் சகல விடயங்களும் அமுலில் இருக்கக்கூடியவாறு நடைமுறைப்படுத்தப்படும்.
10. கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக் கேள்வியில் ஒரு பகுதியைமட்டும் ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது அல்லது இப்பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக்கேள்வியாளர்களுக்கான பொறுப்புகள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்துச் செய்வதற்கு பிராந்திய பெறுகை குழுவின் தலைவருக்கு பூரண அதிகாரமுள்ளது.

**பெயர் :- மு.இராதாகிருஷ்ணன்**
**பதவி :- தலைவர், வலயக் கல்விப் பணிப்பாளர், பிராந்திய பெறுகைக் குழு**
**முகவரி :- வலயக் கல்வி அலுவலகம் - யாழ்ப்பாணம், செம்மணி வீதி, நல்லூர்**
**தொலைபேசி :- 021-222 2647**
**தொலைநகல் :- 021-222 2647** மின்னஞ்சல் :- acctjaf@gmail.com

(cr.37484) (2.6)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 19 . 03 . 1961
மறைவு 03 . 01 . 2022

அமரர்
**தம்பிப்பிள்ளை இலட்சுமிகாந்தன் (காந்தன்)**
(ஓய்வுபெற்ற இ.போ.ச.சாரதி)

எங்கே வாழ்க்கை தொடரும்
அது எங்கே எவ்விதம் முடியும்
இதுதான் பாதை. இதுதான் பயணம்
என்பது யாருக்கும் தெரியாது
மனித உருவங்கள் மறையலாம்
மானிட நெஞ்சில் பதித்தவை அழியாது
உம்மைப்போல் அன்புள்ளம் கொண்டவரை
இனி எங்கு தேடுவோம்.

**1ஆம் ஒழுங்கை,**
**தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.**

**மனைவி, பிள்ளைகள்,**
**பேரப்பிள்ளைகள்.**

(cr.37482) (2.6)

## இருபத்திமூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 08 . 10 . 1925
இறப்பு 19 . 01 . 1999

## ஸ்ரீமான் செல்லப்பா கனகசபை
(ஸ்தாபகர் - கணேசன் ஸ்ரோர்ஸ்,
சிவகணேசன் ஸ்ரோர்ஸ்)
**திதி: பூர்வபக்க துதியை [02.02.2022]**

பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
அன்பின் திருவுருவாய் எமக்கு வழிகாட்டியாய்
உற்றார், உறவினர், நண்பர்களுக்கு இனியவனாய்
வாழ்ந்து எம்மைவிட்டு பிரிந்து
ஆண்டுகள் இருபத்திமூன்றை மறைத்ததையா
எம் உள்ளங்களில் என்றும் நிலைத்திருக்கின்றீர்கள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**115, பிறவுண் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**உங்கள் [illegible]**
**பிள்ளைகள்**

(cr.374[illegible]) (2.6)

## மரண அறிவித்தல்



தோற்றம் 28 . 01 . 1950
மறைவு 31 . 01 . 2022

## செல்லையா தவராஜா

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், நந்தாவில் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா தவராஜா 31.01.2022 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - இராசம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற செல்லத்துரை - மங்கயற்கரசி தம்பதிகளின் மருமகனும், சாரதாதேவியின் அன்புக் கணவரும், கிருபாலினி, கிருபாகரன், பிரபாகரன் (முகாமைத்துவ உதவியாளர் - யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், நிமலன் (வலி மேற்கு பிரதேச செயலகம்), வித்தியா, நிர்த்திகா ஆகியோரின் அருமை மாமனாரும், பாக்கியலட்சுமி (கனடா), காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் மற்றும் ஜெயலட்சுமி, காலஞ்சென்ற வரதராஜா ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காந்திமதி, சுத்தானந்தன், சந்திரமணிதேவி, நித்தியானந்தன், சரோசினிதேவி, காலஞ்சென்ற சதானந்தன் மற்றும் பாலமீரா ஆகியோரின் அன்பு மைத்துனரும், விஷ்ணுகா, விஷ்ணுஜன், தீபிகன், பிரதீஸ் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பாதிரி கோவிலடி, கொக்குவில் கிழக்கு, கொக்குவிலில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நேற்று (01.02.2022) செவ்வாய்க்கிழமை நடைபெற்று, பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்**

(cs42621) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொங்கியெழுந்த...

**எல்லைதாண்டிய மீன்பிடி**

வடக்குக் கடற்பரப்புகளில் இந்திய இழுவைப் படகுகளின் எல்லைதாண்டிய மீன்பிடியால் தங்கள் மீன்பிடி உபகரணங்கள் சேதமாக்கப்படுகின்றன என்று வடக்கு மீனவர்கள் தொடர்ச்சியாகக் குற்றஞ்சாட்டி வருகின்றனர்.

எல்லைதாண்டிய மீன்பிடி நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று மீனவர்கள் பல்வேறு தரப்புகளிடம் கோரிக்கை விடுத்திருந்தபோதும், இந்த விடயத்தில் எந்த முன்னேற்றமும் இல்லை. வடக்கு மீனவர்களால் அடையாள கவனவீர்ப்புப் போராட்டங்கள் பல தடவைகள் நடத்தப்பட்டிருந்தபோதும், எல்லைதாண்டிய மீன்பிடி தொடரவே செய்கின்றது.

இந்தப் பின்னணியில் கடந்த 27ஆம் திகதி பருத்தித்துறை வத்திராயனில் இருந்து கடற்றொழிலுக்குச் சென்ற இருவர் நேற்றுமுன்தினம் சடலங்களாகக் கரையொதுங்கியுள்ளனர். அவர்களின் உயிரிழப்புக்கு இந்திய இழுவைப் படகுகளே காரணம் என்று உள்ளூர் மீனவர்கள் நம்பும் நிலையில், நேற்றுமுன்தினம் முதல் பருத்தித்துறை மீனவர்களிடையே பெரும் கொந்தளிப்பு நிலை ஏற்பட்டுள்ளது.

**மீனவர்கள் போராட்டம்**

பருத்தித்துறை சுப்பர்மடம் மீனவர்கள் நேற்றுமுன்தினம் காலை முதல் வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இந்திய இழுவைப் படகுகளால் அறுக்கப்பட்ட தங்கள் வலைகளை வீதியின் குறுக்கே வைத்து அவர்கள் மேற்கொண்ட போராட்டத்தால் வீதிப் போக்குவரத்துக்கள் தடைப்பட்டிருந்தன. தங்கள் கோரிக்கைக்குத் தீர்வு கிடைக்கும் வரை போராட்டம் தொடரும் என்று அவர்கள் அறிவித்திருந்தனர்.

**பிடிபட்டது இழுவைப் படகு**

நேற்றுமுன்தினம் நள்ளிரவு பருத்தித்துறைக் கடற்பரப்பில் இந்திய இழுவைப் படகு ஒன்று மீன்பிடியில் ஈடுபடுகின்றமை தொடர்பில் அறிந்த பருத்தித்துறை மீனவர்கள் பைபர் படகுகளில் சென்று இழுவைப் படகை முற்றுகையிட்டனர். படகில் இருந்தவர்களை கரைக்குக் கொண்டுவர முயன்றபோது, இந்திய இழுவைப் படகில் இருந்தவர்கள் பெற்றோல் குண்டு மற்றும் கற்கள் கொண்டு தாக்குதல் நடத்தினர் என்று உள்ளூர்மீனவர்கள்குற்றஞ்சாட்டுகின்றனர். கடலில் இழுபறி நடந்துகொண்டிருந்த சமயம் அங்கு வந்த கடற்படையினர் இழுவைப் படகில் இருந்த இந்திய மீனவர்களைக் கைது செய்ததுடன், படகையும் கையகப்படுத்தினர். அதன்போது இலங்கைக் கடற்படையினர் தங்கள் மீது தாக்குதல் நடத்தினர் என்று உள்ளூர் மீனவர்கள் விசனம் தெரிவித்தனர்.

**பிரதேச செயலகம் முற்றுகை**

நள்ளிரவு நடந்த சம்பவங்களின் எதிரொலியாக நேற்றுக் காலை பருத்தித்துறை மீனவர்களால் மருதங்கேணி பிரதேச செயலகம் முற்றுகையிடப்பட்டது. அலுவலர்கள் எவரையும் உள்ளே விடாத மீனவர்கள், அத்துமீறிய மீன்பிடியைத் தடுக்க வேண்டும் என்றும், உயிரிழந்த இரு மீனவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினர். நூற்றுக்கணக்கான மீனவர்கள் அந்தப் பகுதியில் திரண்டதால் பெரும் பதற்ற நிலைமை காணப்பட்டது. பிரதேச செயலகத்தை முற்றுகையிட்டவர்களுடன் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்துரையாடினார். அதன்பின்னர் பிரதேச செயலகத்துக்குள் அலுவலர்கள் அனுமதிக்கப்பட்டனர். பருத்தித்துறை சுப்பர்மடத்தில் மீனவர்கள் நடத்தி வரும் வீதிமறியல் போராட்டம் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. கடற்றொழில் அமைச்சரும், இலங்கைக் கடற்படைத் தளபதியும் ஒன்றாக வந்து எழுத்து மூலமான உறுதிமொழியை வழங்க வேண்டும் என்று மீனவர்கள் வலியுறுத்தியுள்ளனர். (ஏ-26,319,20,23)

## விரிவடைகிறது...

இடங்களுக்கும் விரிவடைய ஆரம்பித்துள்ளது.

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும்வரை கடலுக்குச் செல்லப் போவதில்லை என்று அறிவித்துள்ள பருத்தித்துறை சுப்பர்மடம் மீனவர்கள், வடக்கின் ஏனைய பிரதேச மீனவர்களும் தங்களின் போராட்டத்துக்கு வலுச் சேர்க்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்திருந்தனர்.

பருத்தித்துறை, பொலிகண்டி மீனவர்களும், பலாலி அன்ரனிபுரம் மீனவர்களும், வளலாய் மீனவர்களும் நேற்று வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். அதனால் பருத்தித்துறை - பொன்னாலை வீதிப் போக்குவரத்து முற்றாகப் பாதிக்கப்பட்டது.

அரசாங்கத்துக்கு எதிராகவும், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு எதிராகவும் மீனவர்கள் கோஷங்களை எழுப்பினர். (ஏ-23,20)

## 21 தமிழக...

மயிலிட்டி துறைமுகத்துக்குக் கொண்டு செல்லப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்படுகின்றனர் என்றும் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்களில் இருவர் 17 வயதுச் சிறுவர்கள் என்று அந்த அதிகாரி தெரிவித்தார். இரு இழுவைப் படகுகளும் கடற்படையினரால் கையகப்படுத்தப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டவர்கள் தமிழ்நாட்டின் நாகபட்டினம் மற்றும் காரைக்கால் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள். அவர்களில் ஒருவருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

விசாரணைகளின் பின்னர் அவர்கள் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார்கள் என்று கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள அதிகாரி தெரிவித்தார். (ஏ-23)

## மீனவர்களுக்கு...

படகை பருத்தித்துறை மீனவர்கள் நேற்றுமுன்தினம் இரவு மடக்கிப் பிடித்ததை அடுத்து அங்கு பதற்ற நிலைமை ஏற்பட்டது. இழுவைப் படகில் இருந்த வலைகள் மீனவர்களால் கொண்டுவரப்பட்டிருந்தன. மீனவர்களிடையே கொந்தளிப்பான நிலைமை காணப்பட்ட நிலையில், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அந்த இடத்துக்குச் சென்றுள்ளார்.

அங்கிருந்த மீனவர்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கருத்துக்களைக் கேட்க மறுத்தனர். அதனால் அங்கு தர்க்கம் ஏற்பட்டது.

"மீனவர்கள் இப்போது மதுபோதையில் இருக்கின்றனர். அவர்களுக்கு விடிந்ததும் போதை தெளிய, நான் வந்து பேசுகின்றேன்" என்று சொல்லிவிட்டு அமைச்சர் டக்ளஸ் அங்கிருந்து அகன்றார்.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த அந்தப் பகுதி மீனவர்கள், "எங்கள் கேள்விகளுக்குப் பதில் வழங்க முடியாத அமைச்சர், எமக்கு வெறி என்று கூறிவிட்டுபுறப்பட்டுச்சென்றுவிட்டார்.எங்கள் வலி எங்களுக்குத்தான் தெரியும்" என்று கொதிப்புடன் தெரிவித்தனர். (ஏ-இ)

## டக்ளஸுக்கு...

மேற்கொள்ளச் சென்ற கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் மீனவர்கள் முரண்பட்டுள்ளனர்.

பலமுறை முறையிட்டும் எந்த நடவடிக்கையும் எடுக்காத நிலையில், இந்த விடயத்தில் இனிமேல் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலையிடத் தேவையில்லை என்று மீனவர்கள் ஆவேசத்துடன் தெரிவித்துள்ளனர். அதையடுத்து மீனவர்களுக்கும் அமைச்சருக்கும் தர்க்கம் ஏற்பட்டது என்று அங்கிருந்தவர்கள் தெரிவித்தனர்.

"நாங்கள் காலையில் இருந்து போராட்டத்தில் ஈடுபடுகின்றோம். எம்மை வந்து சந்திப்பதற்கு எவருக்கும் நேரம் இல்லை.

இந்திய இழுவைப் படகை மடக்கிப் பிடித்ததும் ஓடி வருகின்றார்கள். இவ்வளவு நேரமும் என்ன செய்து கொண்டிருந்தார்கள்?" என்று மீனவர்கள் ஆவேசமாகக் கேள்வி எழுப்பினர். (ஏ-இ)

## பாதிரியாரின்...

ரின் வீடொன்றுக்குள் புகுந்த வன்முறைக் கும்பல் வீட்டில் இருந்த பொருள்களை அடித்து நொருக்கிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று பிற்பகல் 3 மணியளவில் நடந்துள்ளது. கொட்டன்கள், பொல்லுகளுடன் வீட்டுக்குள் நுழைந்த கும்பல் வீட்டில் இருந்த பொருள்களை அடித்து நொருக்கியுள்ளது. வீட்டின் ஜன்னல், கதவு என்பனவும் சேதமாக்கப்பட்டுள்ளன. பின்னர் அங்கிருந்து அந்தக் கும்பல் தப்பிச் சென்றுள்ளது.

சம்பவ இடத்துக்குச் சென்று கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர். சந்தேகநபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்றும் விரைவில் அவர்கள் கைது செய்யப்படுவார்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ஏ-125,23)

## பெப்ரவரி...

வரி 4 தமிழர் தேசத்தின் கரிநாள் என்று அறிவித்துள்ள வடக்கு, கிழக்கு சிவில் சமூகங்கள், அன்றைய தினம் பெரும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுக்கத் திட்டமிட்டுள்ளன.

நாட்டின் சுதந்திர தினம் தமிழர் தேசத்துக்குக் கரிநாள் என்பதை சர்வதேசத்துக்கு எடுத்துரைக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்தப் போராட்டத்துக்கு அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 4ஆம் திகதி முள்ளிவாய்க்கால் முற்றத்தில் முற்பகல் 10 மணிக்கு அனைவரும் ஒன்றுகூடி எதிர்ப்பை வெளிப்படுத்தவேண்டும் என்றும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (ஏ-7)

## பயங்கரவாதச்...

அநுராதபுரம் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 9 பேர் நேற்றுக் கொழும்பு நீதிவான் நீதிமன்றால் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கைது செய்யப்பட்டு பல ஆண்டுகளாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள வடக்கு, கிழக்கைச் சேர்ந்த தமிழர்களை விடுவிக்க வேண்டும் என்ற கோரிக்கை தொடர்ச்சியாகப் புறக்கணிக்கப்பட்டுவரும் நிலையில், 9 பேருக்குப் பிணை வழங்கப்பட்டுள்ளது. ஒவ்வொருவரும் தலா 50 ஆயிரம் ரூபா இரு சரீரப் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் அண்மையில் கைது செய்யப்பட்டு ஒருவருட காலத்துக்குள் விடுவிக்கப்பட்டுள்ளனர். பல ஆண்டுகளாகச் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள எந்த கைதியும் இதுவரையில் விடுவிக்கப்படவில்லை என சுட்டிக்காட்டப்படுகின்றது. (ஏ-7)

## தொடர்கிறது...

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு நேற்றுமுன்தினம் அறிவித்திருந்த நிலையில், நேற்றும் வடக்கு உட்பட நாட்டின் பல பகுதிகளில் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என்று பொதுமக்கள் தெரிவித்தனர்.

இரவு 6 மணி முதல் 9 மணிவரையான காலப்பகுதியில் மின்வெட்டை நடைமுறைப்படுத்தக்கூடாது என்று இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு மின்சார சபைக்கு அறிவித்திருந்த நிலையில், நேற்று மாலை மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது.

மின்சாரத்துக்கான கேள்வி அதிகரித்துள்ளத்தால் மாலை 6.30 மணி முதல் 8.30 மணிவரையான காலப்பகுதிக்குள் மின்வெட்டை நடைமுறைப்படுத்துவதைத் தவிர்க்க முடியாது என்று மின்சார சபைத் தகவல்கள் தெரிவித்தன. (ஏ-இ)

## வட்டுக்கோட்டையில்...

யில் உள்ள வீடொன்றில் இருந்து நேற்று மதியம் நகையும், பணமும் திருடப்பட்டுள்ளன. வீட்டின் உரிமையாளர் கிளிநொச்சி பனை, தென்னை அபிவிருத்திச் சங்கத்தில் பணியாற்றும் நிலையில், நேற்று அவர் கடமைக்குச் சென்றிருந்தார். அவரது மனைவி, மகளை பாடசாலையில் இருந்து தனது தாய் வீட்டுக்கு அழைத்துச் சென்றுவிட்டு பிற்பகல் 4 மணிக்கு வீடு திரும்பியபோது, வீடு உடைக்கப்பட்டு நகையும், பணமும் திருடப்பட்டுள்ளமையை அவதானித்துள்ளார். வீட்டில் இருந்த 10 ஆயிரம் ரூபா பணமும், ஒரு பவுண் நகையும் திருடப்பட்டுள்ளன என்று கூறப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பாக வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. வட்டுக்கோட்டைப் பொலிஸார் இது தொடர்பான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ஏ-27)

## வெடிபொருள்...

கப்பட்டுள்ளது.

பிரதான வீதியோரம் உள்ள பாவனையற்ற காணி ஒன்றில் சந்தேகத்துக்கு இடமான பொருள் ஒன்று காணப்படுகின்றது என்று அச்சுவேலிப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்த எறிகணை மீட்கப்பட்டுள்ளது.

நீதிமன்ற அனுமதி பெற்று எறிகணையை அப்புறப்படுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று அச்சுவேலிப் பொலிஸார் தெரிவித்தனர். (ஏ-125)

## பட்டப்பகலில்...

டுக்கோட்டைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சித்தன்கேணி பிள்ளையார் ஆலயத்துக்கு அருகில் வீட்டின் முன்பாக மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டுச் சென்று திரும்பியபோது மோட்டார் சைக்கிள் காணாமல் போயுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டைப் பொலிஸார் விசாரணை களை முன்னெடுத்து வருகின்றனர். (ஏ-125,27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுமி துஷ்பிரயோகம் ஆசிரியர் ஒருவர் கைது

கொழும்பு, பெப். 2

பாணந்துறையில் 13வயதுச் சிறுமியை துஷ்பிரயோகம் செய்தார் என்ற சந்தேகத்தின் பேரில் ஆசிரியர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேக நபரான ஆசிரியர் சிறுமியை நூலக அறைக்கு அழைத்துச் சென்று துஷ்பிரயோகம் செய்துள்ளார் என்று தெரியவந்துள்ளது. வகுப்பு முடிந்ததும் நடந்த சம்பவத்தை சிறுமி தனது தந்தையிடம் கூறியதையடுத்து பொலிஸில் செய்த முறைப்பாட்டையடுத்து குறித்த நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். பாணந்துறை தெற்கு பொலிஸ் பிரிவின் பெண்கள் மற்றும் சிறுவர் பணியகத்தினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ய-இ)

# புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள் விரைவில்

கொழும்பு, பெப்.2

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளை விரைவாக வெளியிடுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது என்று பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்தது.

நடைபெற்று முடிந்த 2021ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளை ஒரு மாதம் 10 நாள்களுக்குள் வெளியிட முடியும் என்று எதிர்பார்க்கின்றோம் என பரீட்சைகள் ஆணையாளர் எல்.எம்.டி.தர்மசேன தெரிவித்தார். (ஏ-இ)

## காகித இறக்குமதி குறைப்பு; அச்சுத்துறைக்குப் பாதிப்பு

கொழும்பு, பெப். 2

நாட்டில் ஏற்பட்டுள்ள டொலர் தட்டுப்பாடு காரண மாக, காகித இறக்குமதி குறைக்கப்பட்டுள்ளது. இதனால் அச்சுத் தொழிற்றுறை வீழ்ச்சிய டையும் அபாயம் ஏற்பட்டுள்ளது. தற்போது புத்தகங்களை அச்சடிக்கும் காகிதத்தின் விலை சுமார் 150 வீதம் அதிகரித்துள்ளது என்று இலங்கை புத்தக வெளியீட்டாளர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் சமந்த இந்தீவர தெரிவித்துள்ளார். (ம-4-இ)

**வேலையாள்கள் தேவை**

கிளிநொச்சியில் இயங்கும் Lovely Flower Cent க்கு பெண் வேலையாள்கள் தேவை.

தொடர்பு: 077 400 5023

**வீடு வாடகைக்கு தேவை**

சிறிய குடும்பம் ஒன்றிற்கு யாழ். நகர், புறநகர் பகுதியில் வீடு வாடகைக்குத் தேவை.

077 644 6514

**வேலையாள்கள் தேவை**

விதூஸ் தையல் நிலையம்

அத்தியடி யாழ்ப்பாணம்.

பெண்கள் மட்டும்.

தொடர்பு: 076 675 8066

**வேலையாட்கள் தேவை**

யாழ். நகரில் இயங்கும் பான்சி கடைக்கு பெண் வேலையாட்கள் தேவை. சம்பளம் 15,000/= வழங்கப்படும்.

No.01, Hospital Road, Jaffna.

தொடர்பு: 077 5513 375

**வேலைக்கு ஆட்கள் தேவை**

யாழ். நகரில் இயங்கும் பான்சி விற்பனை நிலையத்திற்கு வேலை செய்வதற்கு ஆண், பெண் இருபாலாரும் தேவை.

077 4683354

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம், நுணாவில் வைரவர் கோயில் சந்தியில் மட்டுவில் செல்லும் பிரதான வீதி முகப்புடன் 22 பரப்புக்காணி (நிலப்பரப்பு) இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு.

A9 வீதியிலிருந்து 150m தூரம்

077 2880 152, 077 911 6983

"ஓம் விராட் விஸ்வ பிரம்மனே நமக"

## மரண அறிவித்தல்



**பாலச்சந்திரன் அனுசியா**

இல.150, கஸ்தூரியார் வீதியை பிறப்பிடமாகவும் பிறவுண் வீதி, 1 ஆம் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட பாலச்சந்திரன் அனுசியா நேற்று (01.02.2022) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் பாலச்சந்திரன் (சந்திரன்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான துரைச்சாமி அம்புஜம் ஆகியோரின் மகளும், காலஞ்சென்ற மயில்வாகனம் மற்றும் காமாட்சியின் அன்பு மருமகளும், ஜீத்தா, நிதர்சனின் அன்பு தாயாரும், அன்ரனி டினேஸ்குமார் (யூட்டா) அவர்களின் அன்பு மாமியாரும், அன்டர்சன், அனாமிகாவின் அன்பு பாட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.02.2022) புதன் கிழமை பி.ப. 1.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.37/51, பிறவுண் வீதி,
1ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்

(CS 18334) 1.6

# மரண அறிவித்தல்



அன்னை மடியில் 09.08.1945

ஆண்டவன் அடியில் 30.01.2022

## சின்னத்தம்பி மகாலிங்கம் (மகான்)

**(இ.போ.ச. பேருந்து முன்னாள் சாரதியும், யாழ். மாவட்ட கூட்டிணைக்கப்பெற்ற பஸ் கம்பனிகளின் இணைய மேற்பார்வையாளரும்)**

யாழ்ப்பாணம் கலட்டியைப் பிறப்பிடமாகவும் பட்டினசபை வீதி, மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி மகாலிங்கம் (மகான்) கடந்த (30.01.2022) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நன்னியர் - பூரணம் தம்பதியரின் அன்பு மருமகனும், தவமணியின் அன்புக் கணவரும், சுரேஸ்குமார் (சிறீகுமரன்ஸ் நகைமாடம் - உரிமையாளர்), சதீஸ்குமார் (லண்டன்), ரமேஸ்குமார் (பிரான்ஸ்), காலஞ்சென்ற விஜயகுமார் மற்றும் கனிஸ்ரா ஆகியோரின் பாசமிகு தந்தையும், நாமகள் (கல்யாணி), சுதாமதி (சூட்டி), ஜீவிதா (மாலா), து.ஜீவானந்தன் (அதிபர், யா/மானிப்பாய் விவேகானந்தா வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், பரமேஸ்வரி (பரம்), இராசலிங்கம் (பூச்சி-அமரர்), தர்மலிங்கம் (வண்டு-அமரர்), சுந்தரலிங்கம் (ஓசு-அமரர்), பஞ்சலிங்கம் (ராசா), சந்திரலிங்கம் (தம்பி - பிரான்ஸ்), யோகலிங்கம் (காந்தி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், டனுசுயன், சங்கர்ஷணன், சபிர்தன், அஷ்வின், சயன், ரிதீஷ், ரினுஷா, கஜானிகா, பிரித்திகா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.02.2022) புதன் கிழமை பட்டினசபை வீதி, மானிப்பாயிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 11.00 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக மானிப்பாய், பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

பட்டினசபை வீதி,
மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 02.02.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.